இனி இது ரகசியம் அல்ல!

அரசியல் உள்வீட்டுத் தகவல்களை மோந்து, புகுந்து பிடித்து, நேரத்துடன் எங்களைப் போன்ற ஊடகவியலாளர்களை 'அலேர்ட்' செய்யும் நண்பர் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் அழைப்பு எடுத்தார்.

ஏதோ அதிர்ச்சித் பக்கம் 02

பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 08 வெள்ளிக்கிழமை 22.03.2019 கதிர் 138

# ஜெனீவாவில் பொய் உரைத்தது ஐ.தே.க.!



## கூட்டமைப்பின் பதிலடி விரைவில் வெளிப்படும் என்கிறார் சுமந்திரன்

லண்டன், மார்ச் 22

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை அரசின் சார்பில் உரையாற்றிய – ஐ.தே.கட்சியைச் சேர்ந்த – வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கூறியவை அனைத்தையும் நாம் நிராகரிக்கின்றோம். அந்தக் கூற்றுகள் உண்மைக்குப் புறம்பானவை. சட்டத்துக்கு முரணானவை. அது தொடர்பில் எங்களின் கடுமையான எதிர்வினையை வரும் நாள்களில் நீங்கள் காணலாம்.

– இவ்வாறு சீற்றத்துடன் கருத்து வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

பக்கம் 02

முள்ளிவாய்க்கால் வீடொன்றுக்குள்

## புலிகளின் ஆயுதம் தேடிய பொலிஸாருக்கு ஏமாற்றம்



முல்லைத்தீவு, மார்ச் 22

முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் உள்ள தனியார் வீடு ஒன்றுக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெருமளவு ஆயுதங்கள் மற்றும் ஆவணங்கள் இருக்கின்றன எனக் பக்கம் 11

# ஜெனீவாவில் நேற்று புதிய தீர்மானம் வாக்கெடுப்பின்றியே நிறைவேறியது!

இணை அனுசரணை வழங்கியது இலங்கை



ஜெனீவா, மார்ச் 22

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் 40/1 என்ற புதிய தீர்மானம் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் வாக்கெடுப்பின்றி நேற்று நிறைவேற்றப்பட்டது.

பக்கம் 11

## '20' ஐ நிறைவேற்றுவதில் குறியாக உள்ளது ஜே.வி.பி.

இன்று பிரதமருடன் முக்கிய பேச்சு

கொழும்பு, மார்ச் 22

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக இல்லாதொழிக்கக் கோரும் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், பக்கம் 11

## பட்ஜெட்டுக்குப் பின்பே மூன்றாம் சுற்றுப் பேச்சு!

சு.கவுக்கு மஹிந்த அணி பொறி

கொழும்பு, மார்ச் 22

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இணைந்து புதிய அரசியல் கூட்டணியை அமைப்பது தொடர்பான இரண்டாம் சுற்று பேச்சும் வெற்றிகரமாக முடிவடைந்தது பக்கம் 11

## வலி. வடக்கில் கடற்படைக்கு இன்று காணி அளவீட்டுப் பணி

இடைநிறுத்துமாறு பிரதமர் உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 22

வலி.வடக்கில் கடற்படை முகாமுக்காக 232 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கான அளவீட்டுப் பணி இன்று வெள்ளிக்கிழமை நில அளவீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட பக்கம் 11

கொலை அச்சுறுத்தலை அடுத்து

## பொலிஸ் பாதுகாப்பு கேட்கிறார் யாழ். மாநகர முதல்வர் ஆனல்ட்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 22

தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமையால் கடமையின் பக்கம் 11

## 'தல்செவன' இராணுவ விடுதிக்கு காணி சுவீகரிக்க அனுமதியோம்!

மைத்திரியுடன் பேசுவோம் என்கிறார் மாவை

யாழ்ப்பாணம், மார்ச் 22

காங்கேசன்துறை 'தல்செவன' இராணுவ விடுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள 30 ஏக்கர் நிலம் இராணுவத்தால் சுவீகரிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்தப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பேச்சு நடத்த ஜனாதிபதியை அடுத்த வாரம் தாம் சந்திக்கவுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

காங்கேசன்துறை பக்கம் 02

## மகேந்திரனைக் கொண்டுவர சகல ஆவணங்களும் தயார்!

சிங்கப்பூருக்கு விரைவில் விளக்கமளிப்பார் மைத்திரி

கொழும்பு, மார்ச் 22

அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசியல் மற்றும் இராஜதந்திர மட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்துள்ளார். பக்கம் 02

## மாற்றுத் தலைமை உருவாக்க சித்தார்த்தன், செல்வம் தயாரா?

கேட்கிறார் சிவசக்தி ஆனந்தன்



வவுனியா, மார்ச் 22

முதல்தடவையாக ஐந்து கட்சிகள் இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளோம். இதில் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கையெழுத்திட்டுள்ளனர். பக்கம் 11

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

காலைக்கதிர் Kalaikathir



# வடக்கில் வனவளங்களை பிரபாகரனே பாதுகாத்தார்

## புலிகளுக்கு மைத்திரி பாராட்டு



கொழும்பு, மார்ச் 22

புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் வடக்கில் வன வளத்தை பாதுகாத்தார். அவர் செய்த ஒரேயொரு நல்ல விடயமாக இதை கருதலாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சர்வதேச வன பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நேற்று முற்பகல் திம்புலாகலை வெஹெரகல மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் தற்போதுள்ள வன அடர்த்தியைப் பாதுகாப்பதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படாவிட்டால் இன்னும் 15 வருடங்களில் வன வளத்தை இழக்கவேண்டிய அபாயம் ஏற்படும்.

நாட்டின் எஞ்சியுள்ள 28 வீத வன அடர்த்தியில் பெருமளவு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே உள்ளது. போர் காலத்தில் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் வனவளத்தை பாதுகாத்தார். அவர் செய்த ஒரேவொரு நல்லவிடயமென்றால் அது இதுவாகத்தான் இருக்கும்.

எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் நாட்டின் வன அடர்த்தியை 32 வீதமாக அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றி கொள்வதற்கு 1,48000 ஹெக்ரேயர்களில் புதிதாக மரநடுகை செய்யப்பட வேண்டியுள்ளது.

இதில் வருடம் ஒன்றுக்கு 15,000 ஹெக்ரேயர்களில் மரங்கள் நடப்பட வேண்டியுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அரசு மற்றும் தனியார் துறை, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை பிள்ளைகள் உள்ளிட்ட அனைத்து பிரஜைகளும் ஒன்றிணைய வேண்டும் – என்றார்.

நேற்று முற்பகல் திம்புலாகல வெஹெரகல மகா வித்தியாலயத்துக்குச் சென்ற ஜனாதிபதியை அந்தப் பாடசாலை மாணவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

பாடசாலையில் உள்ள பௌத்த நிலையத்துக்குச் சென்று சமயக் கிரியைகளில் ஈடுபட்ட பின்னர் நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்த ஜனாதிபதி , புதிய வகுப்பறை கட்டடத்தை மாணவர்களிடம் கையளித்ததைத் தொடர்ந்து அதனைப் பார்வையிட்டார்.

பாடசாலை வளாகத்தில் மரக்கன்று ஒன்றையும் ஜனாதிபதி அவர்கள் நாட்டினார். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி சர்வதேச வன பாதுகாப்பு தின நிகழ்விலும் கலந்துகொண்டார். (ஐ-07)

## மகேந்திரனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான சட்டரீதியிலான ஆவணங்களும் இறுதிபடுத்தப்பட்டுள்ளன. எனவே, இது தொடர்பில் ஜனாதிபதி தரப்பிலிருந்து விரைவில் சிங்கபூருக்கு விளக்கமளிக்கப்படும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெறும் குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ எம்.பி. –

அர்ஜுன் மகேந்திரனை இலங்கையிடம் ஒப்படைப்பதில் சிங்கபூர் மந்தகதியில் செயற்படுகின்றது, அந்த நாட்டுப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தும் பயன் இல்லை என்ற தொனியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்து வெளியிட்டிருந்தார்.

எனினும், சிங்கபூர் நாட்டின் சட்டத்தின்பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான ஆவணங்களை இலங்கை அரசு இன்னும் கையளிக்கவில்லை என சிங்கப்பூர் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. இது விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்ன என்று வினா எழுப்பினார்.

இதற்கு அரச தரப்பிலிருந்து எவரும் பதிலளிக்கவில்லை. எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நம்பிக்கைக்குரிய பாத்திரமாக விளங்கும், மஹிந்த அமரவீர எம்.பி. இது தொடர்பில் விளக்கமளித்தார்.

அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட கோரிக்கை குறித்தும், அதற்கு சிங்கப்பூரால் வழங்கப்பட்டுள்ள பதில் குறித்தும் நளிந்த ஜயதிஸ்ஸ எம்.பி. தகவல் வெளியிட்டுள்ளார்.

அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்குக் கொண்டுவருவது குறித்து சிங்கப்பூர் பிரதமருடன் தனிப்பட்ட ரீதியிலும் பேச்சு நடத்தியுள்ளேன் என்று இலஞ்ச, ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் நிகழ்வின்போது ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

இதற்கான அனைத்து சட்ட ரீதியிலான ஆவணங்களும் இறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அரசியல் மற்றும் இராஜதந்திர மட்டங்களிலும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் தனிப்பட்ட ரீதியிலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மகேந்திரனை நாட்டுக்குக் கொண்டுவருவதில் ஜனாதிபதி எடுத்துள்ள நடவடிக்கைகள் உட்பட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் நாட்டுக்கும், சிங்கபூருக்கும் விரைவில் ஜனாதிபதி தரப்பிலிருந்து விளக்கமளிக்கப்படும். – என்றார் மஹிந்த அமரவீர. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் ஒன்றை தெரிவிப்பவர் போல ஒரு விடயத்தைச் சொன்னார்.

"தமிழரசுக் கட்சித் தலைமைப் பதவியில் இருந்து மாவையர் இராஜினாமாச் செய்து விட்டாராம். அறிந்து, பிடித்துச் செய்திபோடும்" – என்று எனக்கு செய்தித் துரும்பு தருபவர் போல பேசினார்.

*"உது பழைய கதை. கனகாலமாக அடிபடுகுது...." – என்று நான் இழுத்தேன்.*

*"இவ்வளவு காலமாக வெளியிலை வரவில்லை. நீர் ஒருக்கா 'செக்' பண்ணிப் பார்த்துப் போடுமன்" – என்றார் அவர்.*

நான் வேறு சோலிகளில் இந்த விடயத்தை மறந்துவிட்டேன். அவரும் விடுபவராக இல்லை. ஒவ்வொரு நாளும் காலையில் பத்திரிகையைப் படித்ததும் – அவர் எதிர்பார்த்த செய்தி வரவில்லை என்ற ஆதங்கத்தில் – எனக்கு விடயத்தை நினைப்பூட்டுவார்.

அவரது தொல்லை தாங்க முடியாமல் இந்த விடயத்துக்குள் இறங்கித் துழாவுவது என்று முடிவெடுத்தேன்.

நான் தொடர்பு கொண்ட தமிழரசுக் கட்சியின் முதல் தூணே எனக்கு அதிர்ச்சியைத்தந்தார்.

*"ஆம், மாவையர் அப்படி ஒரு இராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்துத்தான் இருக்கின்றார். ஆனால் அந்தக் கடிதம் கொடுத்து ஒரு வருடமாகிவிட்டது." – என்றார் அவர்.*

*"அப்படியா? யாரிடம் கொடுத்தார்? அதற்கு என்ன நடந்தது?"* – என்று கேட்டேன்.

*"திடீரென ஒரு நாள் இந்த இராஜினாமக் கடிதம் தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் துரைராஜசிங்கத்துக்குக் கிடைத்தது. அது கிடைத்ததும் அவர் அதிர்ந்துவிட்டார். அந்தக் கடிதத்தையும் எடுத்துக்கொண்டு சம்பந்தனிடம் ஓடினார். சம்பந்தன் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு கடிதத்தை ஒரு தடவை வாசித்தார். பின்னர் சற்று நேரம் கண்களை மூடிக்கொண்டு யோசித்தார். கொஞ்சநேரம் கழித்து கடிதத்தைத் திரும்பவும் வாசித்தார். பின்னர் அதனை துரை ராஜசிங்கத்தின் கைகளில் கொடுத்து 'அதை அங்காலை போடும்.' என்றார். அன்று முதல் கடிதம் கோவையின் அடியில் – அப்படியே – கிடப்பில் போட்டாகிவிட்டது. வேறு நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை." – என்று குறிப்பிட்ட அந்தத் தமிழரசுத் தூண் மேலும் தொடர்ந்தார்.*

*"அந்தக் கடிதத்தில் தாம் தமிழரசுக் கட்சித் தலைவர் பதவியைத் துறக்கின்றார் என்றும், அடுத்த கட்சி மாநாட்டில் தலைவர் தெரிவுக்குத் தான் நிற்க மாட்டார் என்றும், அடுத்த தலைமுறையில் – இளம் தலைமுறையில் – ஒருவரிடம் தலைமைப் பதவி ஒப்படைக்கப்படுவதே நல்லது எனத் தாம் கருதுகின்றார் என்றும் மாவையர் குறிப்பிட்டிருக்கின்றார் எனத் தெரிகின்றது. இந்தக் கடிதத்தின் பிரதி ஒன்று மாவையரின் வலது கரமாக விளங்கும் சி.வீ.கே. சிவஞானத்திடமும் மாவையர் ஒப்படைத்திருக்கின்றார் எனவும் அறியவந்தது. கட்சியின் துணைச் செயலாளர்களுள் ஒருவர் என்ற முறையிலும் இக்கடிதத்தின் பிரதியை சிவஞானத்திடம் மாவையர் ஒப்படைத்திருக்கலாம். ஆனால் சிவஞானத்துடன் மற்றைய துணைச் செயலாளரான சுமந்திரனுக்கு அந்தக் கடிதம் வழங்கப்படவில்லை.*

*"ஆனால், தாம் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகும் இராஜினாமாக் கடிதத்தை அனுப்பி விட்ட தகவலை வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்துக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார் மாவையர். அதைக் கேள்விப் பட்டு டொக்டர் சத்தியமூர்த்தி சுமந்திரனை 'அலேட்' செய்துள்ளார்.*

*"அதன் பின்னர் இது விடயத்தில் மாவையர் சொன்ன கருத்துக்களைசுமந்திரனும் 'அப்படியா?' என்ற தொனியில் செவிமடுத்தார் என அறியவந்தது."* – என்று தகவல் வெளியிட்ட அந்தத் தமிழரசுக் கட்சித் தூண் இன்னொரு விடயத்தையும் சொன்னார்.

*"தாம் தமிழரசுத் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்து விட்டார் என்ற சாரப்பட மாவையர் கருத்து வெளியிட்ட போது அது குறித்து அவருடன் பேசிய சுமந்திரனோ அல்லது டொக்டர் சத்தியலிங்கமோ 'ஐயையோ! ஏன் அப்படிச் செய்கின்றீர்கள்? நீங்கள்தான் தலைவராகத் தொடர்ந்து இருக்க வேண்டும்' – என்று எதுவும் வற்புறுத்தவில்லையாம். 'அப்படியா' என்று கேட்டுக் கொண்டார்கள் என்றுதான் தகவல்.*

*'இன்னொரு விடயமும் உண்டு. மாவையர் கட்சித் தலைமை அடுத்த தலைமுறைக்கு வழங்கப்பட வேண்டும் எண்டு சொன்னதாலும், அது குறித்து டொக்டர் சத்தியலிங்கத்துடன் மாத்திரம் பேசியமையாலும் சத்தியலிங்கத்தைத் தான் அடுத்த தலைவராக்க அவர் விரும்புகின்றார் என்றும் கட்சி மேல் வட்டாரங்களில் ஒரு கருத்து உள்ளது" – என்றார் அவர்.*

*"தந்தை செல்வா கூடதான் கட்சியின் தலைவராக இருக்கவில்லை. மற்றவர்களைத்தான் மாறி மாறித் தலைவர்களாக்கினார் தந்தை செல்வா. சம்பந்தன் கூட 2012 முதல் 2014 வரைத்தான் கட்சியின் உத்தியோக பூர்வத் தலைவராக இருந்தார். மாவை கூட 2014 முதல் 2019 வரை ஐந்து வருடங்கள் தலைவராக இருந்துவிட்டார். ஐந்து வருடங்கள் முடிந்துவிட்டன. அதனால் தந்தை செல்வா வழியில் அதை அடுத்த தலைமுறை ஒருவரிடம் ஒப்படைக்க விரும்பியதில் வியப்பு இல்லை.*

*"ஆனால் அதைக் கேள்விப் பட்டு எங்களில் ஆக்கள் சில பேர் இப்பவே பந்தய ஓட்டம் ஆரம்பிச்சிட்டினம் எண்டு தகவல். எங்கை போயும் முடியுமோ தெரியவில்லை."* – என்று அங்கலாய்த்தார் அவர்.

*''அண்மையில் – கடந்த மாதத்தில் – யாழ். மாவட்டத் தமிழரசுக் கட்சியின் கூட்டத்திலும் தாம் இப்படி இராஜினாமாக் கடிதத்தை அனுப்பி விட்ட தகவலை மாவை அண்ணன் கோடி காட்டினார். கட்சியின் அடுத்த மாநாட்டில்தாம்தலைவர்பதவிக்கு நிற்கமாட்டார் என்பதை அவர் தெளிவுபடுத்தி விட்டார்."* என்று இன்னொரு தமிழரசுக் கட்சிப் பிரமுகர் உறுதிப்படுத்தினார்.

ஆக, இப்போதுள்ள தகவல்களின்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 16ஆவது தேசிய மாநாடு விரைவில் நடைபெறப் போகின்றது. அதில் தலைமைப் பதவித் தெரிவில் மாவையின் பெயர் இருக்காது என்பதுதான் நிலைமை.

ஆனால், அத்தகைய தலைமைப் பதவி எதற்கும் இலக்கு வைக்கும் நிலையில் சுமந்திரன் தரப்பும் இல்லை என்கின்றன அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள்.

அயோத்தி இராஜ்ஜியம் இராமனுக்கு உரியது. இல்லையேல் அவன் தம்பி பரதனுக்கு உரியது. ஆனால் இருவருக்கும் இல்லாமல் இடையில் வந்த பாதுகைக்கு அதுபோக வில்லையா? அது போல தமிழரசுக் கட்சியின் பாதுகை ஒன்றுக்கு அது போனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லைத்தான் பாருங்கள்...! ஏன் என்றால் ஏதோ ஒன்று பாதாளம் வரைப் பாயும் என்பார்களே.... அதனால்....!

**- மின்னல் -**

## ஜெனீவாவில் பொய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனீவாவிலிருந்து இலங்கை திரும்பும் வழியில் லண்டனில் வைத்து ஐ.பி.ஸி. நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

அந்தப் போட்டியில் அவர் கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு:-

தன்னுடைய ஐக்கிய தேசிய கட்சி சிங்கள மக்கள் மத்தியில் மதிப்பை – ஆதரவை – இழந்துவிடக்கூடாது என்பதற்காக சில விடயங்களை ஜெனீவாவில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கூறியிருக்கலாம்.

ஆனால், அதற்காக அவருக்கு வக்காலத்து வாங்க வேண்டிய தேவை எமக்கு இல்லை,

அவர் கூறிய அத்தகைய கூற்றுக்கள் அனைத்தையும் நான் நிராகரிக்கின்றேன். அவை உண்மைக்குப் புறம்பானவை; சட்டத்துக்கும் புறம்பானவை. இப்போதுதான் ஐ.தே.கட்சி அப்படி ஒரு கூற்றை முதல் தடவையாக வெளியிடத் தொடங்கியிருக்கின்றது.

இது சம்பந்தமாக எங்களின் கடுமையான எதிர்ப்பை அடுத்து வரும் சில நாள்களில் நீங்கள் காணலாம்.

எங்கள் முயற்சியில் இனப் பிரச்சினைக்குத் தீர்வான அதிகாரப் பரவலாக்கலை உள்ளடக்கிய புதிய அரசமைப்புக்கான ஒரு வரைவு வடிவம் வெளிவந்திருக்கின்றது. அது உண்மை.

ஆனால் இன்றுள்ள அரசியல் சூழ் நிலையில் அதைத் தொட்டுப்பார்க்க – மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க – எல்லோருக்கும் பயம்.

அதை முற்கொண்டு செல்வதற்கு எவருக்கும் அரசியல் துணிச்சல் இல்லாமல் இருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அந்த அரசியல் துணிச்சல் கிடையாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கொஞ்சம் அரசியல் துணிவு கூடுதலாக இருந்தது என்று நாம் நினைத்திருந்தோம். ஆனால் அவரும் இப்போது தலைகீழாக மாறி நிற்கின்ற காரணத்தினாலே அதுவும் பின்னடைவு கண்டிருக்கின்றது.

ஆனாலும் சம்பந்தன் ஐயாவின் முயற்சியால் தனியாக அதிகாரப் பரவலாக்கல் விடயத்தை யாவது முன்னெடுப்பதற்கான இணக்கம் இப்போது ஏற்பட்டுள்ளது. அந்த முயற்சியை நாம் தொடருகின்றோம் – என்றார். (உ)

## 'தல்செவன'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'தல்செவன' இராணுவ விடுதியை மையமாகக் கொண்டு அந்த விடுதியைச்சுற்றியுள்ள 30 ஏக்கர் நிலம் இராணுவ நிர்வாகத்தின் சுற்றுலாப் பயன்பாட்டுக்காகச் சுவீகரிக்கப்படும் நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு அரசிடம் வலியுறுத்தியுள்ளோம்.

சுவீகரிப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கு ஜனாதிபதி, பிரதமர், காணியமைச்சுடன் பேச்சு நடத்தவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது – என்றார். (ஐ-07)

## குறைந்த வருமானம் பெறும் பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்தப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், மார்ச் 22

சமூகத்தில் குறைந்த வருமானம் பெறும் பெண்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன், தென்னை சார் கைப்பணிப் பொருள்களின் பயிற்சிநெறிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலடியிலுள்ள திவ்விய ஜீவன மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் வைகுந்தன் தலைமையில் இது தொடர்பான இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தென்னை பயிர்ச்செய்கைச் சபை குறைந்த வருமானம் ஈட்டும் பெண்களுக்கு, வீட்டில் இருந்தவாறே கைத்தொழில் செய்வதன் ஊடாக வருமானத்தை அதிகரிக்கும் வகையில் செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் விளக்குமாறு, துடைப்பம், சிரட்டை அலங்காரம், தென்னோலையிலான கைவேலைகள் என்பவற்றுக்கான பயிற்சி நெறிகளே வழங்கப்படவுள்ளன.

இந்த பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்டு நல்லூர் பிரதேச கற்பகதரு சங்க பெண்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## மைத்திரியின் முடிவை எதிர்க்கிறது ஜேர்மனி

ஜெனீவா, மார்ச் 22

மரண தண்டனையை மீண்டும் செயற்படுத்தும் இலங்கை ஜனாதிபதியின் நடவடிக்கை கவலையளிப்பதாக ஜேர்மனி தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நேற்றுமுன்தினம் புதன்கிழமைநடைபெற்ற 40ஆவதுகூட்டத் தொடரில் உரையாற்றியபோதே ஜேர்மன்பிரதிநிதி இவ்வாறு கூறினார்.

இலங்கையில் இடம்பெறுவரும் இடைக்காலச் செயற்பாடுகளில் உள்ள முன்னேற்றத்தை ஜேர்மனி இதன்போது பாராட்டியுள்ளது.

குறிப்பாக மீள்குடியேற்றங்கள் தொடர்பான விடயங்களிலும் காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகளிலும் காணப்படும் முன்னேற்றத்துக்கும் ஜேர்மனி பாராட்டு தெரிவித்துள்ளது.

அத்தோடு இலங்கையின் ஜனநாயகக் கட்டமைப்புக்களை மேம்படுத்தும் செயற்பாட்டுக்கு ஜேர்மனிதொடர்ந்தும்தமது ஆதரவை வழங்கும் என ஜேர்மன் பிரதிநிதி கூறினார். (ஐ)

## முழு நாடும் ஏற்கக்கூடியவரே ஐ.தே.கவின் வேட்பாளராவார்

### கூறுகின்றார் மனுஷ நாணயக்கார

கொழும்பு, மார்ச் 22

அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேட்பாளர் ஒருவரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்க எதிர்பார்த்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடே ஏற்றுக் கொள்ளும், நாடே அன்பு செலுத்தும், அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேட்பாளர் ஒருவரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி களமிறக்கவுள்ளது.

அந்த விடயம் தொடர்பாக இப்போதே கருத்து தெரிவிப்பது தகுந்ததல்ல.

மரியாதைக்குரிய கட்சி என்ற ரீதியில் அனைவரது ஆசியுடனும் குறித்த விடயத்தை வெளியிடுவோம். அதற்காக அனைவரது ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது – என்றார். (ஐ)

## மன்னார் புதைகுழி குறித்து இறுதித் தீர்மானம் இன்று!

### நீதிவான் தலைமையில் கலந்துரையாடல்

மன்னார், மார்ச் 22

மன்னார் மனிதப் புதைக்குழியில் தொடர்ந்தும் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதா அல்லது பூரணமாக அதனை நிறுத்துவதா என்பது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று வெள்ளிக்கிழமை எடுக்கப்படவுள்ளது.

அகழ்வுப் பணிகளை முன்னெடுத்து வரும் விசேட வைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

மன்னார் நீதிவான் ட.சரவணராஜா தலைமையில் மன்னார் நீதிமன்ற வளாகத்தில் இந்தத் தீர்மானம் தொடர்பான கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மன்னார் மனிதப் புதைக்குழி அமைந்துள்ள பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது.

மன்னார் சதொச வளாகத்தில் காணப்படும் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்தப் புதைகுழியிலிருந்து இதுவரை 335 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

அவற்றில், தெரிவு செய்யப்பட்ட 6 எலும்புக்கூடுகளின் மாதிரிகள் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டு, புளோரிடாவிலுள்ள ஆய்வகத்தில் கார்பன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன் அறிக்கை கடந்த வாரம் வெளியிடப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில், 1499 தொடக்கம் 1719ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் புதைக்கப்பட்ட மனிதச் சடலங்களின் எச்சங்களே இவை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குடிதண்ணீர் வசதியில்லாது நானாட்டான் மக்கள் தவிப்பு

மன்னார், மார்ச் 22

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எருவிட்டான் கிராம மக்கள் ஒன்பது மாதங்களாக குடிதண்ணீர் வசதியின்றிப் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இது விடயமாக நானாட்டான் பிரதேச செயலாளர் மற்றும் நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்றபோதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 25 குடும்பத்தினர் வரை குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய கால நிலை மாற்றத்திற்கு அமைய கடும் வெப்பநிலை நிலவுகின்றது. இதனால் குளிப்பதற்கும், குடிப்பதற்கும் போதிய நீர் வசதி இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் கிராமத்திலுள்ள பிள்ளைகள் தொற்று நோய்களுக்கு இலக்காகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

எனவே இந்தப்பிரச்சினை தொடர்பாக நானாட்டான் பிரதேச செயலாளர் மற்றும் நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக பிரதேச சபையின் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதியை வினவியபோது, நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் வட்டாரங்களினூடாக குடிதண்ணீர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைவாக கடுமையாக நீர் பாதிப்புக்குள்ளான கிராமங்கள் பலவற்றுக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் ஊடாக நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தின் நீர்ப் பிரச்சினை தொடர்பாகக் கடந்த இரு நாள்களுக்கு முன் எழுத்து மூலம் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. ஆனால் இன்று வரை கிராமத்தைச் சேர்ந்த எவரும் வந்து கதைக்கவில்லை. இந்தக் கிராமத்திற்கு அவசர நிலையைக் கருத்தில் கொண்டு குடிதண்ணீரை வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் – என்றார். (ஐ)

## தீர்மானத்துக்கு இலங்கை ஒத்துழைப்பது அவசியம்

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

ஜெனீவா, மார்ச் 22

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்துக்கு இலங்கை அரசு ஒத்துழைக்கவேண்டும் எனச் சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்தியுள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்றுவரும் 40ஆவது கூட்டத்தொடரில், நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தின் போது சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி ஹிலாரி பவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அறிக்கையைச் சர்வதேச மன்னிப்பு சபை வரவேற்கிறது.

மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டமை ஆகிய விடயங்கள் தொடர்பாக நீதிப்பொறிமுறையை நிலைநாட்டுவதில் அரசின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் முன்னேற்றமற்ற நிலை குறித்து சர்வதேசமன்னிப்புச் சபை கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

எனவே, சர்வதேச நீதிமன்ற முறைமையின் கீழ் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு மன்னிப்பு சபை ஆதரவளிக்கிறது.

இந்நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்துக்கு இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் – என்றார். (ஐ)

## இரத்தினக்கல் அகழ்ந்தனரென ஐவர் கைது

கொழும்பு, மார்ச் 22

பொஹவந்தலாவ போஹவான தேயிலைத் தோட்டத்தில் சட்டவிரோதமான முறையில் இரத்தினக் கல் அகழ்வில் ஈடுபட்ட ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுஅதிகாலைபொலிஸாருக்கு கிடைத்த இரகசியத்தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பொஹவந்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர்கள் ஹற்றன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

## ரணிலுடன் மல்லுக்கட்டும் அமைச்சர் மத்தும பண்டார

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்ஜித் மத்துமபண்டார தனது பதவியை இராஜினாமா செய்யத் தயாராகி வருகிறார் என உயர்மட்ட அரசியல் வட்டாரங்களில் இருந்து நம்பகமாக அறியமுடிகின்றது.

ஏற்கனவே இந்த அமைச்சுப் பதவியை மாற்றி வேறு அமைச்சு ஒன்றை தருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ள அமைச்சர் ரஞ்ஜித், அது சிரமம் எனில் பதவியை இராஜினாமா செய்யவுள்ளார் எனத் தெரிவித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சைப் பெயரளவில் தான் தாம் வைத்திருக்கிறார் எனத் தெரிவித்துள்ள அவர், இதனை சும்மா இருக்கலாமெனப் பிரதமரிடம் கூறியுள்ளார்.



பதவியைத் துறக்கவும் தயார்

அதேசமயம் ஐக்கிய தேசியக் கட்சி தனது மூத்த உறுப்பினர்களை மதிக்காமல் நடந்துகொள்வது குறித்தும் அவர் பிரதமரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சி அண்மைக்காலங்களில் நெருக்கடி நிலையில் இருந்தபோது நாங்கள் கட்சியுடன் தோளோடு தோளாக நின்றோம். இப்போது எங்களை அசட்டை செய்து நடக்கின்றீர்கள். எங்களுக்கும் அரசியல் செய்யத் தெரியும். அதைச் செய்ய வைத்துவிட வேண்டாம். என்று அமைச்சர் ரஞ்ஜித் பிரதமரிடம் முரண்பட்டார் என மேலும் அறியமுடிந்தது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## பேரினவாதத்தின் கொடூர ஆயுதமே பயங்கரவாதத் தடைச் சட்டமாகும்

தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டமும், அதற்குப் பதிலாகக் கொண்டு வரப்பட உத்தேசிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் நாட்டின் ஜனநாயகத்துக்கும், கருத்து வெளிப்பாட்டுக்குச் சுதந்திரத்துக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்த வல்லன.

முக்கிய மூன்று ஊடக அமைப்புகள் இப்படி அரசுக்கு சுட்டிக்காட்டியிருக்கின்றன.

2015 இல் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசு, இதுவரை காலமும் சுமார் 35 ஆண்டுகளாக இந்த நாட்டில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் காட்டுமிராண்டித்தனமானது, மனித நாகரிக முறைமைக்கு ஒவ்வாதது என ஒப்புக் கொண்டமையோடு அதனை மாற்றியமைக்கவும் இணக்கம் தெரிவித்து அறிவித்தது.

ஆனால், மாற்றாகக் கொண்டு வரப்படும் சட்டம் கூட பகிரங்கமாக விவாதிக்கப்படாமல் - உரிய தரப்பினர் எவரினதும் ஆலோசனைகள் பெறப்படாமல் - இரகசிய மான முறையில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாக சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் மற்றும் ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவை வேதனையுடன் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

இந்தச் சட்டத்தில் 'பயங்கரவாதக் குற்றச் செயல்' என்பது மிகப் பரந்த அர்த்தத்தைக் கொண்டுள்ளது என்பதனால் மனிதர்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான அரசமைப்பு ஏற்பாடுகள் மற்றும் சர்வதேச மரபுகள் கட்டுப்பாடின்றி மீறப்படும் அபாயம் எழுந்துள்ளதாக அந்த அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்தப் புதிய சட்டம் நடைமுறைக்கு வரும்போது சமூக மற்றும் ஊடக வலையமைப்புக்களை பயன்படுத்துவோர் பெரும் ஆபத்தை எதிர்நோக்கும் பேரபாயம் ஏற்பட்டிருப்பதாக அந்த அமைப்புகள் விசனம் தெரிவித்துள்ளன.

அதேசமயம் -

ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மனிதாபிமான முறைமைகளுக்கு மாறானது என்பதை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் மற்றும் பிற சர்வதேச அரங்குகளில் இப்போதாவது ஒப்புக் கொண்டுள்ள நமது அரசுத் தலைவர்கள், அது விரைவில் மாற்றியமைக்கப்படும் என்றும், இப்போதுள்ள செட்டத்தின் கீழ் புதிய வழக்குள் முன்னெடுக்கப்பட மாட்டா ஒன்றும் கூட உறுதியளித்திருந்தனர்.

ஆனால், அந்த உறுதிமொழியையும் மீறி அந்தச் சட்டத்தின் கீழ் புதிது புதிதாக ஆள்கள் கைது செய்யப்படுகின்றமையும் -

அந்தச் சட்டத்தின் கீழ் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றமையும் -

கைது செய்யப்பட்டோர் அந்தச் சட்ட விதிகளின் கீழ் தொடர்ந்து காவலில் வைக்கப்படுகின்றமையும் -

தொடர்வது பற்றிய தகவல்கள் ஆதாரங்களுடன் கிடைத்திருக்கின்றன.

இந்தத் தேசத்தில் முற்றி முறுகிப் போன இன முரண்பாடு மேலும் கூர்மையடைந்து, தீவிரமுற்று, பெரும்பான்மைச் சிங்கள மக்களின் மீது சிறுபான்மையினரான தமிழர்கள் நம்பிக்கையிழந்தமைக்கான காரணங்களில் முக்கியமானது பேரிவாதத்தின் மேலாதிக்கப் போக்காகும்.

அந்தப் பேரிவாத மேலாதிக்கத்தின் கருவியாக - வெளிப்பாட்டு வடிவங்களில் ஒன்றாக - கொடூர ஆயுதமாக - இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டமும் அமைந்தது என்பதே தமிழர்களின் நிலைப்பாடாகும்.

காரணம் காட்டாமல், வெறும் சந்தேகத்தின் பேரில், ஆள்களைப் 'பயங்கரவாதி' என்று பட்டம் சூட்டிக் கைது செய்து, காலவரையறையின்றி தடுப்புக் காவலில் வைத்து சித்திரவதை செய்யவும், பலவந்தமாகப் பெறப்பட்ட ஒப்பங்களைப் பயன்படுத்தி, குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களை உருவாக்கி, அவற்றின் மூலம் சந்தேகநபர்களைக் குற்றவாளிகளாக்கி, பல பத்தாண்டுகள் - அல்லது சாகும் வரை - சிறையில் வைத்திருக்கவும் வகை செய்யும் - வகை செய்த - இந்தச் சட்டம் தமிழர்களைப் பொறுத்தவரை பேரினவாதத்தின் கொடூரக் கரங்களின் ஒரு பேராயுதம்தான்.

அத்தகைய ஒரு சட்டத்தைத் தனது குரூர ஆயுதமாகத் தரித்தபடி, அதனை இன்னமும் தமிழர்களுக்கு எதிராக ஏவிவிட்டபடி, நல்லிணக்கம், புரிந்துணர்வு, அமைதித் தீர்வு குறித்தெல்லாம் பேசுவது அர்த்தமற்றது.

இந்தச் சட்டத்தை ஒரு கையில் வைத்து மிரட்டியபடி, மறுபக்கத்தில் அமைதி பற்றிப் பேசுவதற்குப் பெயர் சமாதனமே அல்ல. அது அச்சுறுத்தி, அடிமைப்படுத்தி, அடக்க வைப்பதாகவே அர்த்தப்படுத்தப்படக் கூடியது.

இதனை ஆட்சியாளர்களும், இலங்கைத் தீவில் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரான தமிழருக்கு நீதி பெற்றுக் கொடுப்பதாக இவ்வளவு நீண்ட காலமும் நாடகமாடி வரும் சர்வதேசமும் புரிந்து கொள்வது அவசியமாகும்.

# புத்தளம் போராட்டத்தை திசை திருப்ப சிலர் சூழ்ச்சி

## அமைச்சர் ரிஷாத் குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 22

அறுவைக்காட்டு குப்பைக்கெதிரான புத்தளம் மக்களின் நியாயமான போராட்டத்தை மழுங்கடித்து, திசை திருப்பும் வகையில் சூத்திரதாரிகள் சிலர் செயற்பட்டு வருகின்றனர் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கலைவாதி கலீலின் பவள விழாவும் 'என் வில்பத்து டயரி' நூல் வெளியீடும் கொழும்பு அல் - ஹிக்மா கல்லூரியில், முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் இடம்பெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ரிஷாத் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தற்போது புத்தளத்தில் சூடு பிடித்திருக்கும் முக்கிய பிரச்சினை அறுவைக்காட்டு குப்பைப் பிரச்சினையாகும். புத்தளம் வீதிகளில் ஜனநாயக ரீதியில் குரலெழுப்பிப் போராடிய அந்த மக்களின் கோரிக்கைகளுக்கு எவருமே செவிசாய்க்க தவறியமையால், கொழும்பு வந்து, இதனை நிறுத்துங்கள், நியாயம் கிடைக்க வழி செய்து தாருங்கள் என்று சில நாள்களுக்கு முன்னர் காலிமுகத்திடலில் பேரணி நடத்தி நாட்டுத் தலைவர்களிடம் மகஜர்களையும் கையளித்தனர்.

அதே போன்று நாங்கள் அரசுக்குள்ளே இருந்தாலும், அதற்கு எதிராக மிகவும் காட்டமாகவும், தொடர்ச்சியாகவும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றோம். அமைச்சரவை என்பது கூட்டு பொறுப்புள்ளது, அங்கு இடம்பெறும் விடயங்களை வெளியில் சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது.

எனினும் இந்தத் திட்டத்தை நிறுத்துமாறு மிகவும் இறுக்கமாக குரல்கொடுத்து, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொறுப்பான அமைச்சருக்கும் உறைக்கும் வகையில் அவர்களுக்கு நாங்கள் உணர்த்தி வருகின்றோம்.

இந் நாட்டில் அண்மையில் ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டபோது, நாங்கள் நேர்மையுடன் அரசுக்குப் பக்கபலமாக இருந்து நியாயம் பெற்றுக்கொடுக்க முழுப்பங்களிப்பையும் செய்துள்ளோம்.

அதே போன்று புத்தளம் மக்களின் நியாயமான இந்த போராட்டத்துக்கு நீதி வழங்குமாறு அரசிலிருந்துகொண்டும் கோரிக்கை விடுக்கின்றோம்.

ஆகக் குறைந்தது அவர்களின் பிரதிநிதிகளைக் கொழும்புக்கு அழைத்து ஏற்பட்டுள்ள பிரச்சினையை கேட்டு இதற்கு என்ன தீர்வை பெற்றுக்கொடுக்கலாம் என்பது பற்றி இன்னும் ஜனாதிபதி , பிரதமர் மற்றும் பொறுப்பான அமைச்சர் சிந்திக்கவே இல்லையென நாம் இடித்துரைத்தோம்.

இவ்வாறு உணர்த்தியபோது, நாட்டுத்தலைவர்கள் அதற்கு தலையசைத்து புத்தளத்து மக்களுடன் பேசுவதென்ற முடிவைத் தந்தனர்.

நாடாளுமன்றத்தில் எமது கட்சியின் தவிசாளர், இராஜாங்க அமைச்சர் அமீர் அலி புத்தளம் குப்பைப் பிரச்சினை தொடர்பில் மிகவும் காரசாரமாக உரையாற்றியதையடுத்து, இப்போது, ஜனநாயகக் காவலர்கள் என தம்மை இனங்காட்டி வரும் சில அரசியல்வாதிகள் வில்பத்து என்ற பூகம்பத்தை மீண்டும் கிளப்பி என்னை மீண்டும் குறி வைத்து தாக்கத் தொடங்கியுள்ளனர். தினமும் சமூக வலைத்தளங்களில் அவதூறுகளைப் பரப்பி வருகின்றனர்.

இவ்வளவு நாளும் புத்தளம் மக்களின் பிரச்சினையை கண்டும் கேட்டும் காணாதது போன்று செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்த அரசியல்வாதி ஒருவர் இப்போது தூங்கிக்கிடந்த இனவாதக் கூட்டத்தை உசுப்பேற்றி தட்டியெழுப்பியுள்ளார்.

அறுவைக்காட்டையும், வில்பத்துவையும் இவர்கள் ஏன் முடிச்சிபோடுகின்றார்கள் என்று உங்களுக்கு விளங்கும், இதன் மூலம் நாங்கள் ஒதுங்கிவிடுவோம், மௌனமாகி விடுவோம் என்று இவர்கள் கனவு காண்கின்றனர்.

எமது கட்சியை பொறுத்தவரை இந்த நியாயமான போராட்டத்தில் மிகவும் தீவிரமாகவும், விடாப்பிடியாகவும் இருக்கின்றது. இதனை வென்று கொடுப்பதில் உளத்தூய்மையுடனும், உண்மையான உணர்வுடனும் செயற்பட்டு வருகின்றோம் – என்றார்.

# ஐ.நா. ஊடாகத் தமிழருக்கு தீர்வு கிடைக்குமா என்பது சந்தேகமே

## கனடா எம்.பி. கரி சங்கரி கருத்து

ஜெனீவா, மார்ச் 22

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஊடாகத் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்பதில் நம்பிக்கை இழந்துள்ளதாக கனடா தெரிவித்துள்ளது.

கனடாவைப் பிரதிநித்துவப்படுத்தி ஜெனீவாக் கூட்டத்தொடரில் கலந்துகொண்டிருந்த கரி சங்கரி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மனித உரிமைகள் கவுன்ஸிலின் செயற்பாடுகளைக் குழப்பக்கூடாது. ஆனால், இதன் மூலம் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்பதில் நம்பிக்கையில்லை.

எனவே, இவ்விடயத்தைப் பாதுகாப்புச் சபையினூடாக குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டுமாயின், அதனை பாதுகாப்புச் சபையுடன் இணைந்து செயற்படுத்தவேண்டும் – என்றார்.

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு சட்ட வல்லுநர்கள் உள்ளடங்கிய புதிய குழு

கொழும்பு, மார்ச் 22

விசாரணைகளைத் துரிதப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டவல்லுநர்கள் அடங்கிய இந்தக் குழுவின் தலைவராக சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி அயோ ஜினசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டு 4 வருடங்களை எட்டியுள்ள நிலையில் பல்வேறு விசாரணைகள் தீர்க்கப்படாமல் உள்ளன.

விசாரணைக்குப் போதுமான அதிகாரிகள் இன்மையால் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரி பதவியேற்ற பின்னர் உருவாக்கப்பட்ட ஜனாதிபதிவிசாரணை ஆணைக்குழு கடந்த 4 வருடங்களாக அரச நிறுவனங்களில் இடம்பெற்ற இலஞ்ச ஊழல், அரச வளங்கள் தவறாக பயன்படுத்தப்படுதல் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாடுகளை விசாரணை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### நாளை

23.03.2019
சனிக்கிழமை

நட்சத்திரம்: திருதியை பி.இ. 02.40 வரை.
திதி : சித்திரை மரண பி.ப.12.20 வரை.
இராகுகாலம் : 09.16 – 10.46
சுப நேரம் : 03.16 – 04.46

# தீர்மானங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்!

## இலங்கையிடம் பிரிட்டன் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 22

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட 30/1 மற்றும் 34/1 தீர்மானங்கள், முழுமையாகவும், தெளிவான காலவரம்புக்கு உட்பட்ட வகையிலும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளுக்கு இலங்கை முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று பிரிட்டன் கோரியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய பிரிட்டன் பிரதிநிதி இதனை வலியுறுத்தினார்.

எமது பார்வையில் 30/1 தீர் மானம், நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தை அடைவ தற்கு முக்கியமான விடயங்களை உள்ளடக்கியிருக்கின்றது.

அனைத்துத் தரப்புகளினதும் ஒருங்கிணைந்த முயற்சியாக அதனை அடைய முடியும். இந்த இலக்கை அடைவதற்கு, இலங்கை அரசுக்குத் தொடர்ந்து ஆதரவும் ஊக்கமும் அளிப்போம் - என்று பிரிட்டன் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

# மாதகலில் நகைகள் திருடியவர் யாழ்.நகரில் மாலை கைதானார்!

யாழ்ப்பாணம், மார்ச் 22

மாதகல் பகுதியிலுள்ள வீடொன்றை உடைத்துச் சுமார் 15 பவுண் தங்க நகைகளைத் திருடியவர் யாழ்ப்பாண நகரில் வைத்துக் கைதாகினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து திருட்டுப்போன நகைகள் சிலவும் திருட்டு நகை ஒன்றை நிதி நிறுவனத்தில் அடைவு வைத்து எடுத்த 37 ஆயிரத்து 500 ரூபா பணமும் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மாதகல், நாவலர் வீதியில் அமைந்துள்ள வீடொன்று நேற்றுமுன்தினம் காலை உடைக்கப்பட்டு சுமார் 15 பவுண் தங்க நகைகள் திருட்டுப் போயிருந்தன. வீட்டிலுள்ளவர்கள் ஆலயத்துக்குச் சென்றிருந்தபோதே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதேவேளை, யாழ்ப்பாணம் நகரில் சந்தேகத்துக்கிடமான வகையில் நடமாடிய ஒருவரை யாழ்ப்பாணம் சிறப்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் மாதகல் பகுதியில் திருடப்பட்ட நகைகளை அடைவு வைக்க யாழ்ப்பாண நகருக்கு வந்தார் எனத் தெரிவித்த சந்தேக நபர், திருட்டு நகைகளின் ஒரு பகுதியைப் பொலிஸாரிடம் வழங்கினார்.

அத்துடன், சுமார் ஒரு பவுண் நிறையுடைய நகையை யாழ்.நகரில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றில் அடைவு வைத்துப் பெற்றுக்கொண்ட 37 ஆயிரத்து 500 ரூபா பணமும் பற்றுச்சீட்டும் சந்தேகநபரிடமிருந்து மீட்கப்பட்டன.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தினேஷ் கருணாநாயக்கவின் கட்டுப்பாட்டிலுள்ள சிறப்புக் குற்றத் தடுப்புப் பொலிஸாரால் சந்தேகநபர் இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ)

## பருத்தித்துறை பிரதேச விளையாட்டு விழா

பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டு விழா (2019) இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெறும்

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் இ.ராஜசீலன் கலந்து கொள்வார். (இ

## இந்து மயானத்தை மீள விடுவிக்கக் கோரி புன்னாலைக்கட்டுவன் மக்கள் போராட்டம்



புன்னாலைக்கட்டுவன் வடக்கு மக்கள் தமது கிராமத்துக்கான இந்து மாயனத்தை மீள விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி வலி.தெற்குப் பிரதேச சபைக்கு முன்பாக நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராம மக்களில் ஒரு தொகுயினர் தமக்கு இந்து மாயனம் வேண்டும். ஏற்கனவே இருந்த மயானத்தைச் சீரமைத்து தருவதாகச் சபையின் செயலர் வாக்குறுதி அளித்தும் இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

எமது கிராமத்துக்கு என இந்து மயானம் இருந்தது. பின்னர் அந்தப் பகுதியை அண்டிய சிலர் சுகாதரத்துக்குப் பாதிப்பு எனக் கூறி அதனை எதிர்த்தனர். இதனால் மயானத்தால் பிரச்சினை தோன்றியது.

அப்போது இந்த விடயத்தில் தலையிட்ட பிரதேச சபையின் செயலாளர், தாம் இது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகவும் மின்சாரத்தின் ஊடாக எரியூட்டும் வசதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். எனினும் நீண்ட காலமாகியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனாலேயே நாம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் - என்றனர்.

போராட்ட இடத்துக்கு வந்த பிரதேச சபையின் தவிசாளர் க.தர்சன், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் சமரசத்தில் ஈடுபட்டார்.

இந்து மாயனம் தொடர்பான விடயம் எமது சபையின் அமர்வில் பேசப்படவுள்ளது. எனவே சபையில் பேசி ஓர் முடிவு எடுக்கப்பட்டதும் உங்கள் மயான அமைப்பின் பிரதிநிதிகளுடன் நாம் கலந்துரையாடுவோம் என உறுதியளித்தார். இதனையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (ஐ -07)

## மஹா கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, மார்ச் 22

தென்மராட்சி சாவகச்சேரி நகர் சங்கத்தானை அருள்மிகு சித்தியடி ஸ்ரீ வீரசக்தி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன மஹா சம்ப்ரோக்ஷண அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி நாளைமறுதினம் ஞாயிறு காலை 6.30 முதல் 7.25 மணிவரையான சுபவேளையில் நடைபெறும்.

எண்ணெய்க் காப்பு சாத்து நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை இடம் பெறும் என தேவஸ்தானத்தினர் அறிவித்துள்ளனர். (இ

## மின் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 22


உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை -

**வவுனியா பிரதேசத்தில்-**

புந்தோட்டம் கிராமம், பொயகுளம் கிராமம் ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில்** - மாந்தை, திருக்கேதீஸ்வரம், நாகதாழ்வு ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## 155ஆவது பொலிஸ் வீரர் தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 22

155ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நினைவு கூறப்பட்டது.

யாழ்ப்பாணம் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் தினேஷ் கருணாரட்ன தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கடமையின்போது உயிர்நீத்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தினேஷ் கருணாநாயக்க தலைமையில் நேற்றுக் காலை யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கை பொலிஸ் சேவையில் கடமையின் போது இதுவரை 3 ஆயிரத்து 124 உத்தியோகத்தர்களுக்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களின் நினைவாக மலர் தூவி பொலிஸ் மரியாதை செலுத்தப்பட்டது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 155 ஆவது பொலிஸ் வீரர்கள் தினத்தின் பிரதான நிகழ்வு கேகாலை மாவட்டம் மாவனெல்ல பிரதேசத்தில் முதலாவது பொலிஸ் அதிகாரி உயிர் நீத்த இடத்தில் பொலிஸ் மா அதிபர் தலைமையில் நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை மீது சர்வதேச விசாரணை; அமைப்புகள் ஜெனீவாவில் அழுத்தம்

ஜெனீவா, மார்ச் 22

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டும் வகையில் சர்வதேச விசாரணையை நடத்தவேண்டும் என்றும், கால அட்டவணையின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நேற்றுமுன்தினம் நடந்த இலங்கை தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஆசிய மனித உரிமைகளுக்கான மையம், கனடா சட்டத்தரணிகளுக்கான உரிமை அமைப்பு உள்ளிட்ட அமைப்புக்களே இவ்வாறு வலியுறுத்தியுள்ளன. (ஐ)



## தவக் காலச் சிந்தனை

### 'மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள்'

'மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள், கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்"

மன்னிப்பது மரியாதைக்கு இழுக்காக எண்ணுவதால் ஏற்படும் முரண்பாடுகள் வீட்டிலும், நாட்டிலும் அமைதியின்மை ஏற்பட காரணமாகிறது. குடும்பத்தில் ஏற்படும் முரண்களை மீட்டுப்பாருங்கள். விடயங்கள் சிறிதாக இருக்கும் அதனை மன்னிக்க தவறுவதால் ஏற்படும் விபரீதங்கள் குடும்ப சிதைவுகளுக்குக் காரணமாவதால் பிள்ளைகளின் நிலையும் பாதிக்கப்படுகின்றமையை காணும் போது எல்லோரும் ஆலயங்களில் ஒன்றாய் கூடி வழிபட்டபோது அவை வாழ்வில் ஏற்றுக் கொள்ளப்படாமையால், ஆன்மிகம் அர்த்தமிழக்கின்றது. இத் தவக்காலம் எமது மனமாற்றத்தில் மன்னிப்பின் அடையாளமாக முன்மாதிரியான செயலாகத் தவக்காலத்தில் எமது வழிபாட்டை வாழ்வாக்கி இறை உறவைப் பலமாக்குவோம்.

மன்னிப்பின் முன்மாதிரிகள் பல எமது வாழ்வல் அறிந்து பெருமை கொள்ள முன்னாள் பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் தன்னை சுட்டு சிறையில் வாடியவரை நேரில் சந்தித்து மன்னித்தமையை உலகமே வியந்து பாராட்டியது. இயேசுவும் தன் சிலுவை சாவில் கூறிய வார்த்தையும் இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும் என்ற மன்னப்பின் மன நிலை எமது வாழ்விலும் வெளிப்பட இத் தவக்காலத்தை அர்த்தமுள்ளதாக்க அழைக்கப்படுகிறோம்.

செ.யோசப்பாலா

# இந்தியாவைப் பாக். தாக்கினால் விளைவு விபரீதமாக இருக்கும்!


எச்சரிக்கை விடுக்கிறது அமெரிக்கா

தற்போதைய சூழலில் இந்தியா மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தினால் நிலைமை மிகவும் மோசமாகிவிடும் என அமெரிக்கா பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுபற்றி கூறியுள்ள அமெரிக்கா வெள்ளை மாளிகையின் மூத்த அதிகாரி ஒருவர், பாகிஸ்தான், பயங்கரவாதிகளுக்கு எதிராக உறுதியான, நிலையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். குறிப்பாக ஜெய்ஷ்–இ–முகமது மற்றும் லஷ்கர்–இ–தொய்பா அமைப்புகள் மீது அவர்கள் நடவடிக்கை மிக முக்கியம். தற்போது உள்ள சூழலில், இந்தியா மீது இன்னொரு பயங்கரவாத தாக்குதல் நடைபெற்றால், அது பாகிஸ்தானுக்குத் தான் ஆபத்து. நிலைமை மிக மிக மோசமாகி விடும். இது இருநாடுகளுக்கும் ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கிவிடும். பாகிஸ்தான் அரசு சில பயங்கரவாத இயக்கங்களையும், அவற்றின் சொத்துகளையும் முடக்கியுள்ளது. அதே போன்று ஜெய்ஷ்–இ - முகமது போன்ற அனைத்து அமைப்புகளின் மீதும் மிகவும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக உள்ளது. இது சம்பந்தமாக அமெரிக்கா, பல உலக நாடுகளுடன் பேச்சும் நடத்தி வருகிறது என கூறினார்.

அமெரிக்கா இப்படி எச்சரிக்கை விடுத்திருக்கும் நிலையில் நேற்றுக் காலை இந்திய எல்லை பகுதியில் பாகிஸ்தான் அத்துமீறி நடத்திய தாக்குதலில் 24 வயதுடைய இந்திய இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

# உலகில் மிக செலவு குறைந்த நகரங்களில் ஒன்று சென்னை

## பொருளாதார ஆய்வில் தகவல்



உலகிலேயே மிகவும் செலவு குறைந்த நகரங்களின் பட்டியலில் இந்தியாவின் சென்னை, டெல்லி, பெங்களூரு ஆகியவை இடம்பெற்றுள்ளன.

பிரிட்டனைச் சேர்ந்த 'எகானமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யூனிட்' என்ற நிறுவனம் சார்பில் உலகம் முழுவதும் உள்ள நகரங்களில் நிலவும்விலைவாசியை மையமாககொண்டு ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வு முடிவுகள் அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இதில், உலகிலேயே வாழ்வதற்கு அதிக செலவு ஏற்படும் நகரமாக பிரான்ஸ் தலைநகர் பாரீஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்த இடங்களில், சிங்கப்பூர், சீனாவின் ஹொங்கொங், சுவிற்ஸர்லாந்தின் சூரிச், ஜப்பானின் ஒஸாகா, ஜெனீவா ஆகிய நகரங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இதேபோல், உலகிலேயே செலவு குறைந்த நகரங்களின் பட்டியலில் இந்தியாவின்தலைநகரம் டெல்லி, தமிழகத்தின்தலைநகர் சென்னை, கர்நாடகா தலைநகர் பெங்களூரு ஆகியவை தேர்வு செய்யப்பட்டுள்ளன.

(உ)

# மதுரை பத்திரிகை அலுவலக எரிப்பு; வழக்கில் 9 பேருக்கு ஆயுள் தண்டனை

மதுரை, மார்ச்22

மதுரையில் 'தினகரன்' பத்திரிகை அலுவலகத்தில் 3 பேர் எரித்துக் கொல்லப்பட்ட வழக்கில் 'அட்டாக் பாண்டி' உள்ளிட்ட 9 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து உயர்நீதிமன்ற மதுரைக் கிளை தீர்ப்பு வழங்கி உள்ளது.

2007 இல் மதுரை தினகரன் நாளிதழ் அலுவலகம் எரிக்கப்பட்டது. தேர்தல் கருத்துக் கணிப்பு வெளியிட்டதால், இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

தினகரன் நாளிதழ் அலுவலகம் எரிக்கப்பட்ட போது வினோத், முத்துராமலிங்கம், கோபிநாத் ஆகிய 3 ஊழியர்கள் கொல்லப்பட்டனர். இது தொடர்பான வழக்கில் மதுரை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இந்த வழக்கில் அட்டாக் பாண்டி உள்ளிட்ட 9 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து உயர்நீதிமன்ற மதுரைக்கிளை தீர்ப்பு வழங்கி உள்ளது.

பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



* ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
* பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
* கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
* காணி விற்பனையில் பிரச்சினையா?
* வியாபார முன்னேற்றம்
* வீட்டில் ஒற்றுமை உண்டா
* பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன - 077 939 5222
Viber- 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

Study in LATVIA

Schengen visa (France, Germany, Italy, Norway, Poland, ...)
ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு

Admission open for 2019 Sep Intake



★ நீங்கள் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவரா?
★ IELTS இன்றி உயர் கல்வியினை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்.
★ கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
★ கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
★ 100% விசா உத்தரவாதம்.
★ குறைந்த பாட நெறி கட்டணம்
★ வேறு நாடுகளில் விசா நிராகரிக்கப்பட்ட மாணவர்களுக்கும் அனுமதி பெற்றுதரப்படும்.

100% Scholarship Available in ITALY

iCS A Complete Visa Solutions
Study Abroad Expert

Admissions :- 077 3013060
107 B 1/1 , Galle Road , Colombo 6

MANGOS
INDIAN VEG

Now Celebrating
Happy HOUR
5pm - 6pm

BUY ONE GET ONE FREE

MANGOS

Selected
Dosa, Kotthu,
&
Chille Parata

Takeaway Only & Conditions apply

Call Us or Visit Us
94 777 661 083
94 21 222 8296
mangosveg@gmail.com
www.mango.lk

359, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

FREE WiFi

# உலகில் மகிழ்ச்சியான நாடு பின்லாந்து; இந்தியாவுக்கு 140 ஆவது இடம்தான்!

## ஐ.நா. புள்ளிவிவர ஆய்வில் தகவல்

உலகின் மகிழ்ச்சியான நாடுகளில் இந்தியா 140 ஆவது இடத்தில் உள்ளதாக ஐ.நாவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் திகதியை உலக மகிழ்ச்சிதினமாக ஐ.நா அறிவித்தது. அதிலிருந்து ஆண்டு தோறும் மகிழ்ச்சியான உலக நாடுகள் பட்டியலை ஐ. நா. வெளியிட்டு வருகிறது. அதன்படி, 2019ஆம் ஆண்டிற்கான உலகத்தின் மகிழ்ச்சி நாடுகள் அறிக்கையை ஐ.நா நேற்று முன்தினம் வெளியிட்டது. அதில் உலகிலேயே மகிழ்ச்சியான நாடாக கடந்த வருடத்தை போல இந்த வருடமும் பின்லாந்து தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. முதல் 10 மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் டென்மார்க், நோர்வே, ஐஸ்லாந்து, சுவிற்ஸர்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகள் உள்ளன. உலக நாடுகளின் வருமானம், சுதந்திரம், நம்பிக்கை, ஆரோக்கிய வாழ்க்கை, சமூக ஆதரவு, மக்களின் இரக்க குணம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

கடந்த ஆண்டு 133 ஆவது இடத்தில் இருந்த



இந்தியா, இந்த ஆண்டு 140 ஆவது இடத்தில் உள்ளது. உலகின் பணக்கார நாடாக கருதப்படும் அமெரிக்கா இதில் 19ஆவது இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் 67ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 125ஆவது இடத்திலும் உள்ளது. சீனா 93 ஆவது இடத்தை பெற்றுள்ளது. ஆப்கானிஸ்தான் 154 ஆவது இடத்தில் உள்ளது. தான்சானியா 153 ஆவது இடத்திலும், மத்திய ஆபிரிக்க குடியரசு 155 ஆவது இடத்திலும் உள்ளன. ருவாண்டா நாடு 152 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

# கஸகஸ்தானின் நீண்ட கால ஜனாதிபதி 30 வருட ஆட்சியின் பின் பதவி துறப்பு!

கஸகஸ்தான் உதயமானது முதல் 30 ஆண்டுகள் அதிபராக பதவிவகித்த நர்ஸூல்தான் நாஸர்பாயெவ் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

நர்ஸூல்தான் ராஜிமானாவைத் தொடர்ந்து நேற்று நடைபெற்ற அரசு விழாவில் இடைக்கால அதிபராக காஸிம் ஜோமார்ட் டாகாயெவ் பதவியேற்றுள்ளார் என நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவித்தார்.

தொலைக்காட்சியில் புதன் இரவு உரையாற்றிய நர்ஸூல்தான், "நாடு சுதந்திரம் பெற்றகாலத்திலிருந்து அதிபராக பொறுப்பேற்று அதன் மொத்த காலத்திலும் நான் அலுவலகத்தில் பணியாற்றி வந்தேன். தற்போது என் பதவியை ராஜினாமா செய்யப்போகிறேன்" என்று அவர் தெரிவித்தார்.

நேற்று புதிய அதிபருக்கான பதவியேற்பு விழாவுக்கு நர்ஸூல்தான் வருகை புரிந்தார். அவர் விழா மண்டபத்தில் நுழைந்ததும் அங்கு அமர்ந்திருந்த நாடாளுமன்ற அங்கத்தவர்கள் மற்றும் அரசின் உயரதிகாரிகள் உள்ளிட்டோர் கைதட்டி வரவேற்றனர். பின்னர் டாகேயெவ் உரையாற்றும் இடத்திற்கு பின்பக்கம் சென்று அமர்ந்து கொண்டார்.

புதிய அதிபர் காஸிம் ஜோமார்ட்



ராஜினாமா செய்த கஸகஸ்தான் அதிபர் நர்ஸூல்தான் நாஸர்பாயெவ் புதனிரவு தொலைக்காட்சியல் உரையாற்றிய போது.....

டாகாயெவ் பதவியேற்ற சில நிமிடங்களிலேயே, தனது பதவியின் முதல் கடமையாக முன்னாள் அதிபரின் பெயரை கஸாக்குகளின் நகரமான அஸ்தானாவுக்கு சூட்டப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

நர்ஸூல்தான் ஒரு மேலான புரட்சியாளர் என்றும் ஆட்சியில் அவரது தாக்கம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மேலும் ஆளுங்கட்சிக்கும் அரசின் பாதுகாப்பு கவுன்ஸிலுக்கும் தலைவராக நர்ஸூல்தான் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மொஸ்கோ வெளியுறவு மையத்தின் இயக்குநர் டிமிட்ரி ரெனின் தனது ட்விட்டர் பதிவில், "நர்ஸூல்தான் நாஸர்பாயெவ் கீழே இறங்கவில்லை; அவர் மேலே ஏறியிருக்கிறார். நாட்டின் அதிகார மாற்றங்களை அடுத்த சில ஆண்டுகளுக்கு மேற்பார்வையிடப் போவது அவர்தான்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் நான்காவது பதவிக்காலம் வரும் 2024 இல் முடிவடையப் போகிறது. அவர் அநேகமாக இவரைத்தான் ஜனாதிபதி வழிகாட்டியாக தனது விருப்பமாகத் தெரிவிப்பார்" எனத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளை விளிம்பு நிலைக்குத்தள்ளி ஒரே கட்சி ஆளும் நாடாக மாற்றியதாக நர்ஸூல்தான் நாஸர்பாயெவ் மீது பரவலான விமர்சனம் உண்டு.

எனினும், ரஷ்யாவின் தெற்கிலும் சீனாவின் மேற்கிலும் அமைந்துள்ள மிகப்பெரிய எண்ணெய் வள நாடான கஸகஸ்தானில் ஸ்திரத் தன்மையைக் கொண்டுவந்ததிலும் மக்களிடையே அமைதியை நிலைநாட்டியதிலும் உலக நாடுகளின் பாராட்டுதல்களைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீண்டகாலம் பதவி வகித்துவிட்டதால் தனது பதவியிலிருந்து தானே விலகிக்கொள்ள நர்ஸூல்தான் முடிவு செய்திருக்கலாம் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

# 'செமி ஒட்டோமெட்டிக்' துப்பாக்கிகளுக்கு தடை விதித்து நியூஸிலாந்து அரசு அறிவிப்பு

## மசூதி மீதான தாக்குதலை அடுத்து நடவடிக்கை

கிறிஸ்ட் சர்ச் துப்பாக்கிச் சூட்டை தொடர்ந்து 'செமி ஒட்டோமெட்டிக்' (பகுதியாகத் தானியங்கி) துப்பாக்கிகளை நியூஸிலாந்து அரசு தடை செய்து உத்தரவிட்டுள்ளது.

நியூஸிலாந்தில் கிறைஸ்ட் சேர்ச் நகரில் உள்ள அல்நூர் மசூதி மற்றும் லின்வுடன் பகுதியில் உள்ள மசூதிகளில் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை அன்று முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் தாங்கள் வைத்திருந்த துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்றனர். இதில் 50 பேர் பலியாகினர். இதில் 7 பேர் இந்தியர்கள்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் முக்கியக் குற்றவாளியான பிரெண்டன் டாரன்ட் கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணை நடந்து வருகிறது. உலகையே இந்த சம்பவம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்த நிலையில் இந்த சம்பவத்தில் கொலையாளி பயன்படுத்திய செமி ஒட்டோமெட்டிக் துப்பாக்கி மற்றும் ரைபிள் ரகத் துப்பாக்கிகளை கடுமையான துப்பாக்கிகளுக்கான விதிகளுக்கு கீழ் கொண்டு வந்து தடை செய்வதாக நியூசிலாந்து அறிவித்துள்ளது.

இது குறித்து நியூஸிலாந்து பிரதமர் ஜேசிந்தார் ஹார்டன் கூறும்போது, கிறிஸ்ட் சேர்ச் துப்பாக்கிச் சூடு நடந்து ஆறு நாள்கள் கடந்த நிலையில் நியூஸிலாந்தில் செமி ஒட்டோமெட்டிக் மற்றும் ரைபிள் ரகத் துப்பாக்கிகளை தடை செய்வதாக அறிவிக்கிறோம்.

மார்ச் 15 ஆம் திகதி நமது வரலாற்றையே மாற்றி அமைத்திருக்கிறது. இனி நமது துப்பாக்கிச் சட்டங்கள் நாட்டைப் பாதுகாக்கும் என்பதை நியூஸிலாந்து மக்கள் சார்பாக அறிவிக்கிறேன் – என்றார்.

இந்த நிலையில் புதிய துப்பாக்கி சட்டங்கள் ஏப்ரல் 11 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கின்றார் எனவும் ஜேசிந்தார் தெரிவித்தார்.

# கனடா எதிர்க்கட்சித் தலைவராக இந்திய வம்சாவளி வந்த சீக்கியர்!



கனடா நாட்டு நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சீக்கியர் ஜக்மித் சிங் தேர்வு செய்யப்பட்டார். இதற்காக உலகெங்கிலும் இருந்து அவருக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் ஜக்மித் சிங். இவரது குடும்பம் 1979 இல் இந்தியாவிலிருந்து கனடாவுக்கு குடிபெயர்ந்தது. இவர் கனடாவிலுள்ள பர்னபி தெற்கு தொகுதியிலிருந்து வெற்றி பெற்று நாடாளுமன்ற எம்.பி.யாக கடந்த மாதம் தேர்வானார். இவர் பிரதான எதிர்க்கட்சியான புதிய ஜனநாயக கட்சியை (என்டிபி) சேர்ந்தவர்.

எம்.பி.யாகத் தேர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதன்மூலம் வெள்ளையர் அல்லாத முதல் எம்.பி., எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெருமையை பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இந்நிலையில் 2 நாள்களுக்கு முன்பு கனடா நாடாளுமன்றம் கூடியது. தலையில் டர்பனுடன் நாடாளுமன்ற அவைக்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் ஜக்மித் சிங்கை, உறுப்பினர்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர். 40 வயதாகும் ஜக்மித் சிங், அவைக்கு தனது கன்னிப் பேச்சைத் தொடங்கினார். அவர் பேசும்போது, எதிர்க் கட்சித் தலைவரானதில் மகிழ்ச்சி. கடந்த வாரம் நியூஸிலாந்திலுள்ள மசூதிகளில் தீவிரவாதி நடத்திய தாக்குதலில் 49 முஸ்லிம்கள் உயிரிழந்தனர். அவர்களது குடும்பத்தாருக்கு எங்களது ஆறுதல்களை தெரிவிக்கிறோம்.

தெற்குபர்னபி நகரில் உள்ள மக்களுக்கு போதுமான குடியிருப்பு வசதிகள் இல்லை.

எனவே அவர்களுக்குத் தேவையான வசதியை நாம் ஏற்படுத்தித் தரவேண்டும்.

நகர மக்கள் சொந்த வீடுகளில் வசிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.


எனவே 5 லட்சம் வீடுகளைக் கட்டித்தர அரசு உறுதி அளிக்குமா? என்று கேள்வி எழுப்பினார்.

அப்போது பிரதமர் ட்ரூடோ பேசும்போது, புதிய உறுப்பினருக்கு எனது வாழ்த்துகளை தெரிவிக்கிறேன். வறுமைக்கு எதிராக அரசு போராடி வருவதை அனைத்து உறுப்பினர்களும் அறிவர். உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்றார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஜக்மித் சிங் எழுப்பிய கோரிக்கைக்கு சமூக வலைதளங்களில் பரவலாக பாராட்டுக்கள் கிடைத்து வருகின்றன.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
புதிய பிரிவுகள் ஆரம்பம் : 23.03.2019
சனி ஞாயிறு வகுப்புக்கள்
காலை 08 - 10 மாலை 03 - 05
வாரநாள் வகுப்புக்கள்
(செவ்வாய், வியாழன்) 21.03.2019
காலை 08 - 30 - 10.00 மாலை 03 - 4.30
3 மாத பயிற்சிக் கட்டணம் 3000 மட்டுமே
16 வயதுக்கு மேற்பட்ட எவரும் இணைய முடியும்
SAAMSON Expertise in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்.நகர்.
021 222 4282
077 621 4567

ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச் சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்
இருபாலை சந்திக்கு அண்மையில் (கிழக்கு வீதி)
திருமணத்தடை, புத்திரபாக்கியம், புத்திரப்பாக்கியதடை, தொழில் வியாபார தடைகள், வெளிநாட்டு பயணத்திற்கான பரிகாரம் முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவைற்றுக் கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக்குளத்திலும் (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு – யாழ்ப்பாணம்), (திங்கள், செவ்வாய் – வவுனியா)
தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும் (0763287119)



- செ. மாநிதி -

# நீர் பேசுகின்றேன்!

## காப்பாற்றுங்கள்; என்னைக் காப்பாற்றுங்கள்!

உலக அளவில் தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவுவதாக - அதாவது உலகில் நன்னீரின் அளவு குறைந்து வருவதாகவும் அதனால் கடும் சிக்கலில் மனித குலம் சிக்கியுள்ளதாகவும் பரவலாக நம்பப் படுகிறது. ஆனால் மொத்தத் தண்ணீரின் அளவு மாற வில்லை. தண்ணீரைப் பயன்படுத்துவதில் நேரும் தவறுகளின் விளைவாகத் தான் சிக்கல்கள் வேரூன்றியுள்ளன. உணவில்லை என்றால் கொஞ்சம் பொறுத்துக் கொள்பவர்கள் அதிகம்தான் ஆனால் தாகத்தை பொறுத்துக் கொள்ள யாராலும் முடிவதில்லை.

தென்னாபிரிக்கா கேப்டவுண் உலகின் நீரற்ற முதலாவது நகரமாகிவிட்டது. அத்துடன் இன்னும் 12 நாடுகள் வருங் காலத்தில் இந்நிலையை அடையும் எனஎதிர்வு கூறப்பட்டுள்ளது. மூன்றாம் உலகப்போர் நீரிற்காகவே ஆரம்பமாகும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

நீரின் மகத்துவத்தையும், பொருளாதார வளர்ச்சியில் அதன் முக்கியத்தையும் உணர்த்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை 1993 முதல் பங்குனி 22ஆம் திகதியை உலகதண்ணீர் தினமாக அறிவித்து, ஒவ்வொருஆண்டிற்கும் நீர் தொடர்பான ஓர் தொனிப்பொருளை தெரிவுசெய்து கொண்டாடி வருகின்றது. கடந்த ஆண்டின் (2018) தொனிப் பொருள் ' இயற்கையுடன் சேர்ந்து நீர் வளத்தைப் பெருக்குதல்' பற்றியதாகும்.

தனிநபருக்குக் கிடைக்கின்ற நீரின் அளவிற்கும் ஒருநாட்டின் வறுமைக்கும் நெருங்கியதொடர்பு இருக்கின்றது. ஆண்களும் பெண்களும் நீரைத்தேடி அலைவதாலும் பலமணி நேரம் காத்துக்கிடப்பதாலும் அவர்களின் உழைக்கும் நேரம் வீணடிக்கப்பட்டு வருமானக்குறைவு ஏற்படுகிறது. தாய் தந்தைக்கு மாணவர்கள் உதவும் நோக்கில் பாடசாலை செல்லாது வீட்டிலேயே தங்கி விடுகின்றனர்.

அதிகரித்துவரும் மக்கள்தொகை, தொழில்துறை விரிவாக்கம் மற்றும் நகர்ப்புறவளர்ச்சி ஆகியகாரணங்களால்

> ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பிய வாழ்க்கையை வாழ நினைப்பது தவறல்ல. மாறாக அடுத்தவரை மிக முக்கியமாக இயற்கையை அழிப்பது சரியாகுமா? சிந்திப்போம்... இன்னும் 20 வருடங்களில் யாழ் குடாநாடு பாலைவனமாகி விடும் என்பது பலரதும் சிந்தையிலுள்ள ஓர் விடயம். ஆனால் அதனை எவ்வாறு தடுப்பது என்பதை சுற்றுச்சூழல் சார்ந்த அதிகாரிகளிடம் விட்டுவிடுகின்றோம்.

தண்ணீருக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

அதாவது 2050 ஆம் ஆண்டளவில் நீர்த்தேவை மிகப் பெரியளவில் அதிகரிக்குமென ஐ.பி.சி.சி; என்றழைக்கப் படும் உலகின் காலநிலையைக் கண்டறியும் அமைப்பு கோடிட்டுக்காட்டியுள்ளது. நீர்த்தேவை ஒரு பக்கம் அதிகரித்து வரும் அதேவேளை, நீர் இருப்பைத் தக்க வைப்பதற்கும், புதியநீராதாரங்களைப் பெருக்குவதற்குமான வாய்ப்புக்கள் மண்ணரிப்பு, நீராதாரங்களின் சிதைவு அல்லது பராமரிப்பற்ற நிலை பல்வேறு காரணங்களால் குறைந்து கொண்டே வருகின்றன. வருடத்தின் மழை நாள்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளதை வானிலை மையத்தின் புள்ளிவிவரங்கள் உறுதி செய்கின்றன.


இந்நிலையிலிருந்து மீள்வது எப்படி என்று சிந்தித்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

'வானிலிருந்துவிழும் ஒரு துளி நீரையேனும் மனிதருக்குப் பயன்படாது கடலைச் சென்றடைய விடமாட்டேன்' என்றான் மன்னன் பராக்கிரமபாகு. அம் மன்னனின் சிந்தனையும் செயல் வடிவமும் உலகத்தை இன்றளவும் திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றதென்றால் மிகையாகாது. அந்தளவிற்கு அந்நாள்களிலேயே விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு பல தொழில்நுட்பங்கள் நீர் சேமிப்பில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

பாலைவனத்திலும் ஒரு சோலை இருக்குமென்பது முதுமொழி. அது உண்மையும்கூட. ஆனால்பாலை வனமாகிக் கொண்டிருக்குமிடங்களை எவ்வாறு சோலைகளா பேணுவதென்பதேநம் சிந்தையிலெழ வேண்டிய கேள்வியாகும். யாழ்ப்பாணமென்றாலே நினைவிற்கு வருவது பனை மரங்கள்தான். இங்குதான்பனைஆராய்ச்சி நிறுவனமும் அமைக்கப்பட்டுள்ளது. ஏன்? என்ற கேள்வி எழும்போது அதற்கான விடையே நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது.

'பாலைவனத்தில் பனைமரம் வளராது, ஆனால் பனைமரம் ஒருவரண்ட நிலப்பயிராகும். ஆயிரம் அடிக்கும் கீழே சென்று தண்ணீரை உறிஞ்சி வைத்துக் கொள்ளும்.

ஒரு கிணற்றைச் சுற்றி பத்து மரம் இருந்தால் கடைசி வரைக்கும் அந்தக் கிணற்றில் தண்ணீர் வற்றாது. அந்த பனைமரம் கழுத்து முறிந்து சாகிற



தென்றால் உன் நாடு பாலைவனமாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதை நீ புரிந்து கொள்' இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் புனைமரம் தன் தலைமுதல் கால்வரை அனைத்தையுமே மனிதர்கள்; பயன்படுத்துவதற்கு வழங்கி விடுகின்றது. அதுமட்டுமன்றி நிலத்தடி நீரை சேமிக்க உதவும் கால்வாய்களாக இதன் வேர்கள் மிகப்பெரிய சேவையை ஆற்றிவருகின்றன. நாமோ பனைமரங்களை வெட்டி விற்றுவிட்டு பணத்தை பெற்றுக்கொண்டு நம்வழியிலே செல்ல எத்தனிக்கிறோம்.

ஒவ்வொருமனிதனும்தான் விரும்பிய வாழ்க்கையை வாழ நினைப்பது தவறல்ல, மாறாக அடுத்தவரை மிக முக்கியமாக இயற்கையை அழிப்பது சரியாகுமா? சிந்திப்போம்... இன்னும் 20 வருடங்களில் யாழ் குடாநாடு பாலை வனமாகிவிடும்என்பதுபலரதும்சிந்தையிலுள்ள ஓர் விடயம். ஆனால் அதனை எவ்வாறு தடுப்பது என்பதை சுற்றுச்சூழல் சார்ந்த அதிகாரிகளிடம் விட்டுவிடுகின்றோம்.

வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளால் அதிகமாக வெளியிடப்படும் காபனீரொட்சைட்டால் வளிமண்டலம் பாதிக்கப்படுகிறது. மழை வீழ்ச்சியின் மாற்றத்திற்கு இது ஓர் முக்கிய காரணமாகும். இதனை நிவர்த்தி செய்ய புதிய மரங்களை நட்டுக்காடுகளை உருவாக்கி பசுமை உட்கட்டுமானங்களை அதிகரிப்பது அவசியமாகிறது.

வேலைத் தளங்கள், தொழிற்சாலைகள் மற்றும் வீடுகளில் நீரை விரயமாக்காது வினைத் திறனாகப் பயன்படுத்துவதன் மூலமும் கழிவுநீரை சுத்திகரிப்புச் செய்துமீள்பாவனைசெய்வதன்மூலமும் பயன்படுநீரை பாதுகாத்துக்கொள்ளலாம். சதுப்பு நிலங்கள், கண்டற் தாவரங்கள் மற்றும் வெள்ளத்தைத் தாங்கக்கூடிய இடங்களைப் பாதுகாத்து, அதிவேகமாக குறைந்துவரும் நிலத்தடிநீரை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அழிவடைந்து வரும் குளங்களையும் பாவனையற்று கைவிடப்பட்ட



நிலையிலுள்ள நீராதாரங்களையும் செயற்படு நிலைக்கு மாற்றியமைத்து சுற்றுச்சூழலோடு உயிர்ப் பல்வகைமையையும் பாதுகாப்பதால் விவசாயம் மற்றும் வீடுகளுக்கான நீர்த் தேவைகளை விரைவில் பூர்த்தி செய்யமுடியும்.

தீவகப் பகுதியில் கூடுதலான தேவாலயங்களில் மழைநீரைச் சேமிக்கும் பெரியநிலக்கீழ்த்தொட்டி அமைக்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது. தீவின் மிகப் பிரதானமான பிரச்சினையாக குடிதண்ணீரை அடையாளம் கண்டு மழைநீரைச் சேமிக்கும் பெரும் நிலக்கீழ்த்தொட்டியை அந்நாளிலேயே அமைக்க முடிந்திருக்கிறது என்றால், இன்று எமக்கு எல்லாமே கைக்குகிட்டிய தூரத்திலேயே உள்ளன. தொழில் நுட்பமும் பல சிறந்த வழிகளை காட்டிநிற்கின்றது.

நாம் காற்றுள்ளபோதே தூற்றவேண்டும். இந்நிலை என்று மாறும் என்று சிந்திப்பதற்குப் பதிலாக எவ்வாறு மாற்றுவது என்பதே காலத்திற்குப் பொருத்தமாக இருக்கும். எத்தனை பெரியவரானாலும் நீர் இல்லாமல் வாழமுடியாது. அந்த நீரோ மழை இல்லாமல் கிடைக்காது. அந்த வகையில் நீரை வீண்விரயம் செய்யாது சேமிக்கும் வழிகளை சிந்தித்துச் செயற்படுத்துவோம். இவ்வாண்டின் குடிநீர் தினத்திற்கான தொனிப்பொருளாக **"Leaving no one behind"** என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இன்று அல்ல நாளை என்பது என்றல்லாமல். இன்றே செய்வோம், இக்கணமே செய்வோம்;,

அதை நன்றே செய்வோம்...

**Do it right now don't postpone...**

'நீரின்றமையாதுலகெனின் யார் யார்க்கும்

வானின் றமையாதொழுக்கு' (குறள் எண் - 20)

*

# அலையில் சிக்குண்டு இருவர் சாவு

கொழும்பு, மார்ச் 22

அம்பலாங்கொடை - அக்குரல பகுதியில், கடலில் நீராடச்சென்ற இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு, பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனரென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் 66 வயதுடைய நபரும், 17 வயதுடைய இளைஞனுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

# போலி நாணயத்தாள் அச்சிட்ட நால்வர் பொலிஸ் வலையில்

கொழும்பு, மார்ச் 22

கிரிபத்கொட - திப்பிட்டியகொடை பகுதியில், போலி நாணயத்தாள்களை அச்சிட்டு வந்த இடமொன்றைச் சுற்றி வளைத்த பொலிஸார் அங்கிருந்த நால்வரைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களுள், போலி நாணயத்தாள்களை அச்சிட காரணமாக இருந்த பிரதான சந்தேக நபரும் உள்ளடங்குகிறார் என கிரிபத்கொட பொலிஸார் கூறினர்

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 1,000 ரூபா போலி நாணயத்தாள்கள் 32, 500 ரூபா நாணயத்தாள்கள் 7 கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றை அச்சிடப் பயன்படுத்திய கணினி உள்ளிட்ட மேலும் பல உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ஐ)

# பீடி இலைகளுடன் இருவர் கைது!

*மன்னார், மார்ச் 22*

*தலைமன்னார் பகுதியிலிருந்து 912 கிலோ 960 கிராம் அளவில் ஒரு தொகை பீடி இலைகளுடன் இலங்கைக் கடற்படையினரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இந்தநபர்களிடமிருந்து 27 மூடை பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், இந்த மூடைகள் நேற்று முன் தினம் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.*

*கைது செய்யப்பட்ட நபர்கள் இருவரும் மன்னார், பேசாலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)*

**வாடகைக்கு தேவை**

நல்லூரில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு அரியாலை மாம்பழம் சந்திக்கு அண்மையாக வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:

**077 603 0787**

# யாழ். – இந்தியா விமான சேவைக்கு தனியார் துறையினர் முதலிடலாம்!

## பிரதமர் ரணில் பகிரங்க அழைப்பு



கொழும்பு, மார்ச் 22

யாழ்ப்பாணம் மற்றும் இந்தியாவுக்கான விமான சேவையில் முதலீடு செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனியார் துறையினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நடந்த வணிக மாநாடு ஒன்றில், தம்மிக பெரேரா என்ற வணிகர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு விமானங்கள் இயக்கப்படுவதில்லை என்றும், இது புலம்பெயர் தமிழர்களின் முறைப்பாடு என்றும் கூறியிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது உறவுகளைப் பார்க்கச் செல்லும் போது, கட்டுநாயக்கவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு விமானத்தில் செல்ல முடியாதிருப்பதாக அவர்கள் முறையிடுகின்றனர் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணத்துக்கோ, இந்தியாவுக்கோ யாரேனும் விமான சேவைகளை நடத்த முடியும். அதற்கான கதவுகளை அரசு திறந்தே வைத்திருக்கிறது. தனியார் துறையினர் இதற்கான முயற்சிகளை எடுக்கலாம் என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கைக்கான துருக்கித் தூதுவர், ஐரோப்பாவில் இருந்து கொழும்புக்கு விமானத்தில் பயணம் செய்ய 10 மணிநேரம் ஆகிறது. ஆனால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து கல்கிசையில் உள்ள விடுதிக்கு, தரை மார்க்கமாகச் செல்வதற்கு, வெறும் 43 கி.மீ பயணம் செய்வதற்கு 1 மணித்தியாலம் 40 நிமிடங்கள் தேவைப்படுகின்றன.

விமான நிலையத்தில் இருந்து கட்டுநாயக்கவில் அருகில் உள்ள பஸ் நிலையத்துக்குச் செல்வதற்கு உள்ளூர் போக்குவரத்து வசதிகள் இல்லை. என்றும் சுட்டிக்காட்டியிருந்தார். (ஐ)

# முஸ்லிம்கள் – சிங்களவர் மோதல்! பாணந்துறையில் பெரும் பதற்றம்!!

## விசேட அதிரடிப்படையினர் குவிப்பு

கொழும்பு, மார்ச் 22

பாணந்துறை சரிக்கமுல்ல திக்கல பகுதியில் வாகன விபத்துச் சம்பவம் ஒன்றையடுத்து முஸ்லிம் இளைஞரின் வீடு மீது நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு சிங்களவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனையடுத்து ஏற்பட்ட இரு தரப்புத் தாக்குதல்களால் பலர் காயமடைந்துள்ளனர்.

மேல்மாகாண ஆளுநர் அஸாத் ஸாலி, நாடாளுமன்ற உறுப்பினர் பௌசி ஆகியோர் பிரச்சினையில் உடன் தலையிட்டுப் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பில் விசேட அதிரடிப் படையினர் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் களமிறக்கப்பட்டமையைத் தொடர்ந்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தாக்குதலில் காயமடைந்த முஸ்லிம்களை வைத்தியசாலையில் அனுமதிக்கச் சிலர் இடையூறு விளைவித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, விபத்து மற்றும் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நான்கு முஸ்லிம் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கோட்டா எமக்கு சவால் கிடையாது

## கூறுகின்றார் ராஜித சேனாரத்ன

கொழும்பு, மார்ச் 22

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடுகின்றமை ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சவால் அல்ல என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சிறுபான்மைக் கட்சிகளின் வாக்குகளை வெற்றி கொள்வதற்கு கோட்டாபய ராஜபக்ஷவினால் முடியாது. சிறுபான்மையினருடன் ஒரே மேசையில் உணவருந்தினாலும் கடந்த அரசு காலத்தில் கோட்டாபய சிறுபான்மை மக்களுக்கு இழைத்துள்ள அநீதிகளை அவர்கள் மறக்கமாட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு உள்ள சிறந்த எதிர் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷதான். ஜனாதிபதித்



தேர்தலில் வெற்றி பெறுவதற்கான அவகாசம் ஐக்கிய தேசிய முன்னணிக்கு அதிகமாக உள்ளது.

பொதுஜன பெரமுனவின் பொதுவேட்பாளர் முன்பிருந்தே அரசியலை ஆரம்பித்திருக்க வேண்டும். 2015 ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் இருந்த ஜனாதிபதி தெற்கு வாக்குகளின் மூலம் மட்டுமே வெற்றிபெற முடியும் என நம்பிக்கை வைத்திருந்தாலும் அதனைத் தோற்கடிப்பதற்கு எம்மால் முடியும். இனவாதம், மதவாதம், குலவாதத்திற்கு மக்கள் இனியும் வாக்களிக்கமாட்டார்கள் - என்றார். (ஐ)

# ஜெனீவாவில் அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றவேயில்லை இலங்கை அரசு!

## ஜெனீவாவில் தெரிவித்தார் கஜேந்திரகுமார்



ஜெனீவா, மார்ச் 22

இலங்கை அரசு, கடமைக்காகவே ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுடன் தொடர்பு களைப் பேணுகிறதே தவிர, பொறுப்புக் கூறல் தொடர்பில் தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற எதுவித நடவடிக்கை யும் மேற்கொள்ளவில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித் தார்.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40 ஆவது கூட்டத்தொடரில் நேற்று முன் தினம் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை மீதான விவாதம் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

குற்றவியல் பொறுப்புக்கூறலைக் கோரிப் போராடி வரும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் இலங்கையின் பிரதமர் அந்தக் குற்றங்களை மன்னித்து மறந்துவிடுமாறு வெளிப்படையாகக் கோரியுள்ளார். இலங்கை அரசின் உயர் மட்டத் தலைவர்கள் குற்றவியல் பொறுப்புக்கூறலைத் தொடர்ந்தும் ஒருமனதாக நிராகரித்து வரும் நிலையில் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் இந்த அடிப்படை அபிலாஷையை நிறைவேற்றமுடியாது என தெட்டத் தெளிவாகப் புலப்படுகிறது.

யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்கள் ஆகின்ற நிலையில், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துவதன் மூலம் அல்லது இலங்கைக்கான விசேட சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றை நிறுவுவதன் மூலம் மாத்திரமே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான குற்றவியல் நீதியை நிலை நாட்டலாம் என்பதை ஆணையாளர் ஏற்றுக் கொள்வாரா? - என்றார். (ஐ)

# ஜோஸ் பட்லர் உலக அரங்கில் அபாயகரமான வீரர்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான ஜோஸ் பட்லர், உலக அரங்கில் அபாயகரமான துடுப்பாட்ட வீரர் என ஆஸ்திரேலியா அணியின் வீரரான ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.பி.எல். ரி - 20 தொடரில், விளையாடுவதற்காக வந்துள்ள ஸ்டீவ் ஸ்மித்திடம் இத்தொடர் குறித்து வினவிய போதே, அவர் இதனைக் குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

ஜோஸ்பட்லருடன் இணைந்து விளையாடுவது சிறப்பான விடயம். அவருடன் இணைந்து துடுப்பெடுத்தாடும் போது எனது பணி எளிதாகிவிடும். ஜோஸ் பட்லர் அற்புதமான வீரர், உலக அரங்கில் அபாயகரமான துடுப்பாட்ட வீரராகவும் திகழ்கிறார்.

ஜெய்ப்பூரில் விளையாடுவதற்கான வாய்ப்பு ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு இதற்கு முன்னர் கிடைக்கவில்லை. தற்போது கிடைத்துள்ளது சிறப்பான விடயம். இரசிகர்கள் பெரிய அளவில் திரண்டு வந்து எங்களை ஆதரிப்பாளர்கள் என நம்புகிறேன்



என கூறினார்.

ஐ.பி.எல். ரி - 20 தொடரில், ஜோஸ் பட்லரும், ஸ்டீவ் ஸ்மித்தும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்காக விளையாடுகின்றனர்.

தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியின் போது பந்தை சேதப்படுத்தியதற்கு, உடந்தையாக இருந்த குற்றத்திற்காக அப்போதைய தலைவராக இருந்த ஸ்டீவ் ஸ்மித்திற்கு ஓராண்டு தடை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து, அவர் வெளிநாடுகளில் நடைபெறும் ரி -20 லீக் தொடர்களில் விளையாடி வந்தார். தற்போது அவரது தடை நிறைவுக்கு வரவுள்ளது.

இதற்கிடையில், இத்தொடர் ஸ்டீவ் ஸ்மித்திற்கு மிக முக்கியமாக தொடராக பார்க்கப்படுகின்றது.

காரணம் இத்தொடரில் சிறப்பாக விளையாடினாலேயே அவருக்கு உலகக்கிண்ண தொடருக்கான ஆஸ்ரேலிய அணியில் இடம் கிடைக்கும். ஆகவே அவர் எவ்வாறு செயற்பட போகிறார் என்பதனை பொறுத்திருந்து பார்ப்போம்.

நடப்பு ஆண்டுக்கான ஐ.பி.எல். ரி - 20 லீக் தொடர், எதிர்வரும் மார்ச் 23ஆம் திகதி முதல் மே மாதம் 19ஆம் திகதி வரை நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக் கது.



# கரணவாய் கொலின்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 22

வலிகாமம் லீக்கின் அனுசரணையோடு தெல்லிப்பளை நாமகள் வி.க நடத்தும் அணிக்கு 07 பேர் கொண்ட வடக்கின் நாயகன் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கரணவாய் கொலின்ஸ் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் அணி மோதியது.

இவ் ஆட்டத்தில் 03:02 என்ற கோல் கணக்கில் கொலின்ஸ் அணி வெற்றி பெற்றது.

(ஐ)



# இறுதி போட்டிக்கு இமையாணன் தகுதி

கம்பர்மலை கலாவாணி சன சமூக வைர விழாவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இமையாணன் மத்தி அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி மோதியது. ஆட்ட நேர முடிவில இரு அணிகளும் தலா இரு கோலை பெற்றமையால் வெற்றியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர் உதை முடிவில் 03:02 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்தி அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக இமையாணன் மத்தி அணி வீரர் சுலக்ஷன் தெரிவு செய்யப்பட்டார்.

# 2019 ஐ.பி.எல். தொடரின் அட்டவணை வெளியீடு!

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் முழு மையான லீக் போட்டி அட்டவணையை இந்தியக் கிரிக்கெட் சபை வெளியிட்டது.

12ஆவது ஐ.பி.எல் ரி - 20 போட்டிகள்மார்ச்23யில்துவங்குகிறது. தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்பு ஏப்ரல் 5ஆம் திகதி வரையிலான போட்டி அட்டவணை ஏற்கனவே வெளியிடப்பட்டது. இந்நிலையில் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, எஞ்சிய அட்டவணை வெளியிடப்பட்டது.

மே 5ஆம் திகதி வரை 56 லீக் போட்டிகள் நடைபெறுகின்றன. நொக் –அவுட் சுற்றுப் போட்டிகளுக்கான அட்டவணை இன்னும் வெளியிடப்படவில்லை. முதல் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்க உள்ளது.

இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் –பெங்களூரு றோயல் சேலஞ்சர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்நிலையில், நொக் – அவுட் போட்டியின் முதல் தகுதிகாண் போட்டி மே 7ஆம் திகதி நடைபெறும் என்றும், இறுதிப்போட்டி மே 12ஆம் திகதி சென்னையில் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

மேலும், தவிர்க்க முடியாத காரணத் தால் போட்டிகள் வேறு இடத்தில் நடத்த வேண்டியிருந்தால், விசா கப்பட்டினத்தைத் தயாராக வைத் திருக்க இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளதாகத் தகவல் கள் கூறுகின்றன.

# அரையிறுதிக்குள் நுழைந்தது றோயல்



பீஸ் ஸ்போட்ஸ் அனுசரணையில் நாவாந்துறை கலைவாணி வி.க நடத்தும் அணிக்கு 07 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற பி பிரிவு அணிகளுக்கான ஆட்டம் ஒன்றில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றி பெற்றது.

றோயல் அணி சார்பாக கபில் ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

பி குழுவில் இடம்பெற்றிருந்த றோயல் அணி ஒரு வெற்றி, ஒரு தோல்வி, ஒரு சமநிலை என 04 புள்ளிகளைப் பெற்று அந்தக் குழுவில் இண்டாவது அணியாக அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## '20' ஐ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பி. இன்று வெள்ளிக்கிழமை முக்கிய பேச்சு நடத்தவுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் பிற்பகல் 2 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறும் என்றும், தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, விஜித ஹேரத், சுனில் ஹந்துன்நெத்தி ஆகிய எம்.பிக்கள் இதில் பங்கேற்பார்கள் என்றும் ஜே.வி.பியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் ஜே.வி.பி. தீவிரமாக இறங்கியுள்ளது.

இதற்கமைய எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்து, '20' ஐ ஆதரிக்குமாறு ஜே.வி.பியினர் கோரிக்கை விடுத்தனர்.

20ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு ஆதரவளிக்கப்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்தாலும், மஹிந்த அணியின் நிலைப்பாடு இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து, '20' குறித்து ஜே.வி.பியினர் பேச்சு நடத்தவுள்ளனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதில் ஐக்கிய தேசியக் கட்சி குறியாக இருக்கின்றது.

எனினும், ஐ.தே.க. தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும், தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகியன எதிர்ப்பு வெளியிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளது.

ஆயினும் அந்தப் பணி கைவிடப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் காணி அமைச்சர் கயந்த கருணாநாயக்க ஆகியோரினால் நேற்றுக் காலை தனக்கு அறிவிக்கப்பட்டது என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

ஆயினும் இந்த அறிவிப்பு நில அளவைத் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை எனவும், திட்டமிட்டபடி இன்று காணி அளவீடு இடம்பெறும் எனவும் திணைக்கள வட்டாரங்கள் கூறின.

232 ஏக்கரில் பெரியளவிலான கடற்படை முகாமை அமைப்பதற்காக நகுலேஸ்வரம், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் நிலங்களைச் சுவீகரிப்பதற்கு இன்று அளவீட்டுப் பணி இடம்பெறும் என நில அளவைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

தமக்குப் பிரதமரால் வழங்கப்பட்ட உறுதிமொழியை மீறி இந்தக் காணி சுவீகரிப்பு முன்னெடுக்கப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியிருந்தது.

இந்த நிலையில் இன்று நடைபெறவிருந்த காணி அளவீட்டுப் பணி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கு அமைய இடைநிறுத்தப்பட்டுள்ளதாக காணி அமைச்சர் கயந்த கருணாதிலக்க மற்றும் பிரதமர் அலுவலகத்தால் நேற்று காலை தமக்கு அறிவிக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

ஆயினும் இன்று திட்டமிட்டபடி அங்கு காணி அளவீடு இடம்பெறும் என நில அளவைத் திணைக்களம் கூறியுள்ளது. (ஐ-07)

## பட்ஜெட்டுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று சு.கவின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. நேற்றுத் தெரிவித்தார்.

அத்துடன், இரு தரப்புக்குமிடையிலான அடுத்த சுற்றுப் பேச்சு எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இரண்டாக உடைந்துள்ளது.

இந்தக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி புதிய கட்சியை (ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன) மஹிந்த அணி ஆரம்பித்ததுடன், கடந்த உள்ளாட்சித் தேர்தலில் தனித்து களமிறங்கி வரலாற்று வெற்றியையும் பதிவு செய்தது.

தற்போது மஹிந்தவும், மைத்திரியும் இணைந்துள்ளதால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை (வெற்றிலைச் சின்னம்) மீண்டும் பலப்படுத்துவதற்குரிய முயற்சியில் சு.க. இறங்கியது. எனினும், இதற்கு பச்சைக் கொடி காட்ட மஹிந்த தரப்பு மறுத்துள்ளது.

அத்தோடு தமது அணியில் வந்து இணையுமாறு சுதந்திரக் கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளது. தாமரைமொட்டிடம் சரணடைவதற்கு சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலர் போர்க்கொடி தூக்கினர்.

இதையடுத்தே புதிய கூட்டணி அமைத்து பொதுச் சின்னத்தின் கீழ் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரு தரப்புகளிலிருந்தும் பேச்சுக்கான குழு அமைக்கப்பட்டுள்ளது.

இரண்டு குழுக்களுக்குமிடையிலான முதல்கட்ட உத்தியோகபூர்வ சந்திப்பு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிலையில் இரண்டாம் சுற்று பேச்சு நேற்றுக் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, உபதலைவர் திலங்க சுமதிபால, முன்னாள் பொதுச் செயலாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாச ஆகியோரும், பொதுஜன பெரமுனவின் சார்பில் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், டளஸ் அழகப்பெரும எம்.பி. ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது அரசியல் கூட்டணிக்கான பூர்வாங்க பணி, வரவு–செலவுத்திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு, அடுத்த தேர்தல் உட்பட மேலும் பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

குறிப்பாக ஏப்ரல் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பட்ஜெட் மீதான இறுதி வாக்கெடுப்பின்போது அதற்கு எதிராக வாக்களிக்குமாறு மஹிந்த தரப்பு பேச்சு குழு உறுப்பினர்கள், சு.க. உறுப்பினர்களிடம் கோரியுள்ளனர்.

இதற்கு சு.க. தரப்பிலிருந்து சாதகமான சமிக்ஞைகள் வெளிப்படுத்தப்பட்டதாக அறியமுடிகின்றது.

எனவே, பட்ஜெட் இறுதிவாக்கெடுப்பில் சுதந்திரக்கட்சி எவ்வாறு செயற்படுகின்றது என்பதை அடிப்படையாக வைத்தே, கூட்டணி விவகாரத்தில் அடுத்தக்கட்ட நகர்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாகவே மூன்றாம் சுற்றுப் பேச்சுக்கான திகதியாக 10 ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என கூறப்படுகின்றது. (ஐ)

## ஜெனீவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் இலங்கை அரசால் காலவரையறை குறிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும் என்ற வாசகம் புதிய தீர்மானத்தின் முன்னுரையில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. ஏனைய விடயங்கள் அனைத்தும் முன்னைய தீர்மானத்தின் உள்ளடக்கங்களே.

பிரிட்டன், கனடா, ஜேர்மனி, மசிடோனியா, மொன்ரிநீக்ரோ ஆகிய நாடுகள் இணைந்து முன்வைத்த இந்தத் தீர்மானத்துக்கு திருத்தங்களின்றி இணை அனுசரணை வழங்குவதற்கு இலங்கை இறுதி நேரத்தில் இணங்கிக் கொண்டது.

இதற்கான தீர்மான முன்வரைவு, 'இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்டது.

இதற்கமைய 2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான இலங்கை அரசு மீதான ஐ.நாவின் கண்காணிப்பு மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடக்கவுள்ள சபையின் 43ஆவது கூட்டத்தொடரில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ள இந்த தீர்மானத்தில், 2021 மார்ச் மாதம் விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 2015இல் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் விரிவான அறிக்கையுடன், சபையில் விவாதம் ஒன்று நடத்தப்படும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

ஜெனீவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டும் இந்தத் தீர்மானத்தில், 30/1 தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜெனீவா நேரப்படி நேற்றுப் பிற்பகல் புதிய தீர்மான வரைவு மீது விவாதம் நடத்தப்பட்டது.

இதில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு உரையாற்றினர். இதனையடுத்து, இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன உரையாற்றினார்.

அதையடுத்து, தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்த எந்த நாடும் கோராத நிலையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது. (ஐ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)கூறிப் குறிப்பிட்டு பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணி ஏமாற்றத்துடன் கைவிடப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் வழங்கிய தகவலையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றின் அனுமதி பெற்ற பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினருடன் அந்த வீட்டுக்குச் சுற்றுக்காவல் போட்டனர்.

அத்துடன் அந்த வீட்டுக்குள் தேடுதல் – அகழ்வுப் பணிகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் மாலை வரை நீடித்த அகழ்வு – தேடுதலில் பழுதடைந்த நிலையில் சில உரப்பைகள் உள்ளிட்ட க்ழிவுப் பொருள்கள் கிடைத்தன. அதனால் அகழ்வுப் பணிகள் கைவிடப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும் போக்குவரத்தின்போதும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கவேண்டும் என யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் கோரியுள்ளார்.

எனக்கு வந்த அச்சுறுத்தலில் நபர் ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மாநகரத்துக்குள் ஏற்பட்டுள்ள அத்துமீறல்களைத் தடுக்கக் கூடுதலான அக்கறை எடுத்துச் செயற்படுவதால் இவ்வாறான அச்சுறுத்தல்கள் வந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டார்.

யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட்டுக்கு கடிதம் மற்றும் அலைபேசி ஊடாகக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த 15ஆம் திகதி முறைப்பாடு வழங்கப்பட்டது.

இந்த நிலையில் தமக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டை முதல்வர் நேற்றுத் தனது அலுவலகத்தில் நடத்தினார். அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 14ஆம் திகதி வியாழக்கிழமை எனக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ஒன்று கிடைத்தது.

மூன்று பேருக்கு இங்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அன்று சாவகச்சேரி இந்துவில் (சயந்தனை) இலக்கு வைத்தார்கள், பிழைத்துவிட்டது. இப்போது உங்களை இலக்கு வைத்துள்ளார்கள். கொஞ்ச நாள் மறைந்திருப்பது நல்லது.

கம்பன் கழகக் கூட்டத்தில் பங்கேற்கவேண்டாம். இராமநாதன் பொல்லாதவர். மாறியிருப்பது நல்லது. எதிரிகள் பல பேர், கவனம். அங்கேயும் உள்ளனர். லேசாக எடுக்கவேண்டாம் – என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மறுநாள் 16ஆம் திகதி எனது துணைவியாரின் அலைபேசியின் வைபர் செயலிக்கு தகவல் ஒன்று வந்தது. புதைகுழி படம் போட்டு ரெடி (Ready?) என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன், இரண்டு தவறிய அழைப்புகளும் வந்திருந்தன.

மீள அழைத்தபோது, பதிலளிக்கப்படவில்லை. உடனடியாகவே சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவித்தேன். அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களை அனுப்பி என்னிடம் விவரங்களைப் பெற்றிருந்தார்.

கம்பன் விழாவின் இறுதிநாள் நிகழ்வில் தொடக்கவுரை என்னுடையதாக இருந்தது. அந்த விழாவில் பங்கேற்கவேண்டாம் என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதன் விளக்கம் என்ன என எனக்குப் புரியவில்லை. எனினும் அன்றைய நிகழ்வில் பங்கேற்க எனக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இதுவரை எனக்கு எவரும் எதிரிகள் இல்லை. அண்மைக் காலமாக மாநகரத்துக்குள் ஏற்பட்ட சில அத்துமீறல்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளால் அச்சுறுத்தல்கள் இருந்தன.

எனக்கு வந்த அச்சுறுத்தலில் நபர் ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மாநகரத்துக்குள் ஏற்பட்ட அத்துமீறல்களைத் தடுக்க கூடுதலான அக்கறை எடுத்து செயற்படுவதனால் இவ்வாறான அச்சுறுத்தல்கள் வந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

அதற்கு முன்னர் எனக்கு எந்தவொரு அச்சுறுத்தலும் விடுக்கப்படவில்லை.

எனவே எனது கடமைக்கும் போக்குவரத்துக்கும் பொலிஸ் பாதுகாப்பைக் கோரத் திட்டமிட்டுள்ளேன் – என்றார். (ஐ-07)

## மாற்றுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் வெறுமனே கையெழுத்து மட்டும் வைத்து கொடுக்கப் போகின்றார்களா அல்லது தமிழ் மக்களின் மாற்றுத் தலைமைக்கான பாதையில் தொடர்ந்து பயணிக்கப் போகிறார்களா?

– இவ்வாறு கேள்வி எழுப்பினார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

வவுனியாவில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மனித உரிமைகள் கவுன்ஸிலில் 30/1 தீர்மானம் முன்வைக்கப்பட்டபோது அது சர்வதேச விசாரணையா, உள்நாட்டு விசாரணையா என்று சொற்களில் தொங்கிகொண்டிருக்காமல் அதன் உள்ளடக்கத்தையே பார்க்கவேண்டும் என்று சுமந்திரன் வலியுறுத்தியிருந்தார். தற்போது புதுக் கதை ஒன்றைக் கூறுகின்றார். மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குக் காலநீடிப்பு வழங்கப்படவில்லை. கண்காணிப்பதற்காகவே இந்த இரண்டு வருடங்கள் வழங்கப்படுகின்றன என்று அவர் சொல்கிறார். தமிழ் மக்கள் மீதுள்ள நலனுக்கு மாறாக அரசைப் பாதுகாப்பதே இதன் நோக்கம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் ஆதரவாக வாக்களிக்கின்றார்கள். அதேவேளை, அந்த அலுவலகத்தில் நம்பிக்கை இல்லை என்று தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொள்கின்றார்கள். பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வரவு – செலவுத் திட்டத்தை விமர்சித்துவிட்டு அதற்கு ஆதரவாக வாக்களிக்கின்றார்கள். இது அவர்களின் இரட்டை முகத்தையே காட்டுகின்றது. இந்த முன்னுக்கு பின் முரணான தன்மை தொடர்பாக தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும். இவர்களுக்குப் பதவிகளையும் பட்டங்களையும் மாடி வீடுகளையும், வசதிகளையும் கொடுத்து இறால் போட்டுச் சுறா பிடிக்கும் செயற்பாட்டையே அரசு மேற்கொள்கின்றது.

இவர்களால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் சர்வதேச ரீதியில் அரசுக்குச் சாதகத்தை ஏற்படுத்துகின்றன. எனவே மாற்றுத் தலைமை தொடர்பாக நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அதே போல முதற் தடவையாக ஐந்து கட்சிகள் இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளோம். இதில் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்களும் கையெழுத்து வைத்துள்ளார்கள். அவர்கள் வெறுமனே கையெழுத்து மாத்திரம் வைத்து கொடுக்கபோகின்றார்களா.? அல்லது தமிழ் மக்களின் மாற்று தலைமைக்கான பாதையில் தொடர்ந்து பயணிப்பார்களா? என்பதை பொறுத்திருந்துதான் பார்கவேண்டும் – என்றார். (ஐ-100)





பொதுத் துறையில் சேவையாற்றியோரைப் பாராட்டி விருது வழங்கும் நிகழ்வை 'ஹெல்ப்பிங் அலையன்ஸ்' நிறுவனம் அண்மையில் கொழும்பில் நடத்தியது.சமூக சேவையாளர் ஈ.எஸ்.பி. நாகரத்தினத்தின் பணிகளைப் பாராட்டி அவருக்கு 'தேச கீர்த்தி' விருதை மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலி வழங்கி வைத்தார். மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் ஞான. திருக்கேதீஸ்வரனுக்கு 'தேசமான்ய' விருது வழங்கப்பட்டது.

## வில்பத்து காடழிப்பு விடயத்தில் ஜனாதிபதி தலையிடவேண்டும்

### நாமல் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, மார்ச் 22

வில்பத்து வனத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் காடழிப்புச் செயற்பாடு குறித்து, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்த வேண்டுமென, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தக் காடழிப்புச் செயற்பாடு தொடர்ந்து இடம்பெற்று பெரும் அழிவு நடப்பதற்கு முன்னர், ஜனாதிபதி இந்த விடயத்தில் தலையிட வேண்டுமென அவர் தனது டுவிட்டர் பதிவில் கோரியுள்ளார்.

இந்தப் பிரச்சினை சூழல் பிரச்சினையாக மாத்திரமன்றி, ஒரு சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளதால், அரசு இந்த விடயத்தில் பொறுப்புடன் செயல்படவேண்டுமெனவும் நாமல் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# ஜெனீவாவில் பதிலளிக்க தவறிவிட்டது இலங்கை!

### மஹிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 22

ஐ.நா. மனித உரிமைகள் சுவட்டத்தொடரில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு அரசு உரிய பதிலை வழங்கத் தவறியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

காலி யக்கலமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தாய் நாட்டைப் பாதுகாப்பதற்காகப் போராடிய பாதுகாப்புத் தரப்பினரைக் காட்டிக் கொடுக்க அரசு தயாராகிறது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை தொடர்பாக பல்வேறுப்பட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் அதற்கு உரிய பதிலை வழங்க அரசு தவறியுள்ளது.

நாடு ஒன்றுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் வழங்க சம்பந்தப்பட்ட நாட்டுக்கு அதிகாரம் உள்ளது - என்றார். (ஐ)

## ஐ.தே.கவுடன் சேரும் எண்ணமே கிடையாது

### கூறுகிறது சுதந்திரக் கட்சி

கொழும்பு, மார்ச் 22

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொள்ளும் எண்ணம் இல்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நொச்சியாகமவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

எனக்கும் ஐக்கிய தேசியக்கட்சியுடன் தனிப்பட்ட உறவுகள் எதுவும் இல்லை.

2015ஆம் ஆண்டு தேசிய அரசு அமைக்கப்பட்டதன் காரணமாகவே இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்பட்டன.

இந்தநிலையில் மீண்டும் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். இதுவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரின் எதிர்ப்பார்ப்பாகும் - என்றார். (ஐ)

## ஜனாதிபதியின் வருகைக்கு புத்தளத்தில் மக்கள் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 22

ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பை வெளியிடுவதற்குப் புத்தளம் மக்கள் தயாராகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மக்கள் பாவனைக்காகத் திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று புத்தளத்துக்கு விஜயம் செய்கிறார்.

இந்த விஜயத்தின்போது புத்தளம் தபால் நிலையத்திற்கு முன்பாக புத்தளத்தில் வாழும் மூவின மக்களும் கறுப்புக் கொடிகளுடன் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு குப்பைகளைப் புத்தளத்தில் கொட்டும் விவகாரம் தொடர்பாக ஜனாதிபதியை நேரில் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படாததை கண்டித்தே இந்த எதிர்ப்பு வெளியிடப்படவுள்ளது. (ஐ)

காணி விற்பனை

உரும்பிராய் வடக்கு, சுன்னாகம் பவர் ஸ்ரேசன் றோட்டில் 22 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு இல - 0772986612




## கொழும்பிலிருந்து மன்னார் வந்த பஸ் விபத்தில் சிக்கியது

### ஆறு பேர் படுகாயம்



கொழும்பு, மார்ச் 22

கொழும்பு - புத்தளம் பிரதான வீதியின் கலா ஓயா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

இரண்டு தனியார் பஸ்கள் நேற்று நேருக்கு நேர் மோதிக்கொண்டதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கி பயணித்த பஸ் ஒன்றும் அநுராதபுரத்திலிருந்து கலா ஓயா நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

விபத்தில் காயமடைந்தவர்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பாக இராஜாங்கனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 22.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.